பொதுசன நூலகம்
- 7 JUL 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 25 | வெள்ளிக்கிழமை | (09.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 203

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

## கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்புடன் புலிகளுக்குத் தொடர்பில்லை

### ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மனிதக் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று தமிழீழ விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.**

கொள்ளுப்பிட்டிச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் ஊடக .இணைப்பாளர் தயாமாஸ்டர் கருத்து வெளியிடுகையில், மனிதக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று மறுத்துரைத்தார்.

மேலும் சமாதான நடைமுறைக்குப் பாரிய பாதிப்பை விளைவிக்கக் கூடிய இத்தகைய மோசச் செயல்களை விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவன்மையாகக் கண்டிக்கின்றதென்று தெரிவித்தார்.

அத்துடன் சமாதானம் ஏற்படுவதை விரும்பாத சமாதான விரோதிகளின் செயற்பாடாகவே இத்தாககுதல் இருக்கலாமெனவும் தயா மாஸ்டர் மேலும் தெரிவித்தார்.

(இ-60,10)

## ஹிங்கிராங்கொட விகாரை மீது கிரனைட் வீச்சு

### விகாராதிபதி படுகாயம்

(கொழும்பு)

பொலநறுவ ஹிங்குராங்கொடவில் உள்ள பபுள புத்த விகாரை மீது நேற்று இடம் பெற்ற கிரனைட் தாக்குதலில் புத்த பிக்கு ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கருணாவின் சகாக்கள் 14 பேரை விகாரையில் பிரஸ்தாபப் புத்த பிக்கு மறைத்து வைத்திருந்தார். கடந்த திங்களன்று கருணாவின் சகாக்கள் 14 பேரும் கைது செய்யப்பட்டதையடுத்து புத்த பிக்குவின் நாடகம் அம்பலத்திற்கு வந்தது.

இதனைத் தொடர்ந்தே பிரஸ்தாபப் புத்த பிக்கு மீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. கிரனைட் தாக்குதலில் படுகாயமடைந்த பிக்கு ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்திசாலைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

மேற்படி சம்பவத்தையடுத்து ஹிங்ராங்கொட புத்த விகாரைப் பகுதியில் பதற்றம் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ம)

## தேசவிரோதிகள் இருவருக்கு புலிகள் மரண தண்டனை!

### மட்டக்களப்பில் மக்கள் முன்னிலையில் நிறைவேறியது

(மட்டக்களப்பு)

இராணுவப் புலனாய்வுப்பிரிவினரின் உதவியுடன் செயற்பட்டு வந்த இருவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்று பகிரஙக மரண தண்டனை வழங்கப்பட்டது.

செங்கலடி பதுளை வீதியில் உள்ள இலுப்படிச்சேனைச் சந்தியில் வைத்து பொதுமக்கள் முன்னிலையில் நேற்றுக் காலை 10 மணிக்கு இவர்களுக்கு பகிரங்க மரண தண்டனை வழங்கப் பட்டது.

மரண தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னர் இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இலுப்படிச்சேனைச் சந்தியில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. கிளைமோர், கைக்குண்டுகள் 02, ரி-56 ரகத் துப்பாக்கியொன்று அதற்குரிய மகசன் மூன்று, கைத்துப்பாக்கியொன்று, கோல்சர்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பனவே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இலுப்படிச் சேனையைச் சேர்ந்த பாலசுந்தரம் ஸ்ரீதரன் (வயது23), பன்குடாவெளியைச் சேர்ந்த தில்லையம்பலம் சுந்தர்ராஜன்(வயது24) ஆகிய இருவருககுமே விடுதலைப் புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கபபடுவதற்கு முன்னர் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்டது. இவர்கள் வைத்திருந்த ஆயுதங்கள் இலங்கை இராணுவம் பயன்படுத்தும் ஆயு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளுப்பிட்டி குண்டு வெடிப்பு; கைதான பெண்ணுக்கு விளக்கமறியல்

(நமது நிருபர்)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட தமிழ்ப் பெணணை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து தற்கொலைக் குண்டுதாரியுடன் நெருக்கமாக இருந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ்ப்பெண் நேற்றுக் கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே நீதிவான் அப் பெண்ணை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரஸ்தாபப் பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் திடுக்கிடும்படியான தகவல்களை அப்பெண் வெளியிட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல் கட்சியொன்றில் நீண்டகாலம் கடமையாற்றிவந்தவரென்றும் தெரிவிக்கப் படுகிறது.

(ம)

## சந்தேகத்தில் கைதான யுவதி முக்கிய பல தகவல்களை வழங்கியுள்ளார்

## லண்டன் பொலிஸார் அதிரடி; 13 ஈழத்தமிழ் இளைஞர் கைது

## சந்தேகத்தில் கைதான யுவதி முக்கிய பல தகவல்களை வழங்கியுள்ளார்

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட யுவதியிடம் இருந்து பல முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாகப் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்ட யுவதியிடம் இருந்து தற்கொலைத் தாக்குதலை நடத்திய யுவதி பற்றிய தகவல்களும் அவரை வழிநடத்திய குழுவினர் பற்றிய தகவல்களும் கிடைக்கப் பெற்றிருப்பதாகப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்கொலைத் தாக்குதல் நடத்திய யுவதி சுமார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஈழத்தமிழ் இளைஞர் கைது

(லண்டன்)

லண்டனில் வன்முறைகளில் ஈடுபட்ட இலங்கைத் தமிழ் இளைஞர்கள் 13 பேரை பொலிஸார் நேற்று திடீர் சோதனை நடத்திக் கைதுசெய்துள்ளனர். 20 வீடுகளில் பொலிஸாரால் நடத்தப்பட்ட சோதனையில், வடிவம் மாற்றியமைககப்பட்ட துப்பாக்கிகள், கத்திகள், கோடரிகள், கொக்கி மட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றுடன் பெருமளவான கடன் அட்டைகள், எழுதப்படாத காசோலைகள், ரொக்கப்பணம் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழ் இளைஞர்களின் வன்முறை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே நேற்றைய திடீர் சோதனை இடம் பெற்றுள்ளது.

இதேவேளை மேற்படி வன்முறைச் சம்பவங்கள் குறித்து தகவல்களைத் தெரிவிக்க பொலிஸார் நேரடித் தொலைபேசி தொடர்பைப் பொது மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

(த)

## மருத்துவபீட மாணவிக்கு ஆதரவாக மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

மருத்துவபீட நிர்வாகம் பழி வாங்குவதைக் கண்டித்தும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்தும் உண்ணாவிரதம் மேற்கொண்டுவந்த யாழ்பல்கலைக் கழக மருத்துவபீட மாணவி கி.புஸ்பமாலாவுக்கு ஆதரவாக பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று முதல் விரிவுரைகளை பகிஷ்கரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மாணவியின்

### பிரச்சினைக்குத் தீர்வு காண குழு அமைப்பு

பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்படும் வரை பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கு மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை பிரஸ்தாப மாணவியின் கோரிக்கைகளை ஆராய்ந்து நடுநிலையுடன் இணக்கமான தீர்வு காணும் பொருட்டு விரிவுரையாளர்கள், மாணவர் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் பல்கலைக் கழக மாநாட்டு மண்டபத்தில் கூட்டமொன்று நடைபெற்றது.

இதில்,அனைத்துப் பீட விரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பீட மாணவிக்கு துணை வேந்தர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவியின் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கும் முகமாகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் மாணவிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

✿யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட சட்டதிட்டங்களுக்கமைய ஒரு மருத்துவ பீட மாணவருக்கு இரண்டாம் வருட மருத்துவமாணிப் பரீட்சையில் தோற்றுவதற்கு நான்கு தடவைகளும் இறுதிச் சந்தர்ப்பமாக மற்றுமொரு தடவையும் வழங்கப்பட்ட பின்னர் அவரது மாணவர் தகுதி நிலை(**Studentship**) தானாகவே நீங்கிவிடும். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 14.05.2004 திகதியிடப்பட்ட கடிதத்தின் பந்தியொன்றில் தாங்கள் நவம்பர் மாதம்

(12ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள் தமிழ்மொழி
ஆக்கம்:
திருமதி செ.உமாகரன் (B.A)

# இன்று ஒரு தகவல்

## தன்னை உணர்ந்த நிலை

இராமகிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது.அப்போது ஒரு ஓவியர் இருந்தாராம். அவருக்கு ஒரு ஆசை "இராமகிருஷ்ணர் படத்தை வரைய வேண்டும். அதை அவரிடமே கொண்டு போய்க் காட்டி அபிப்பிராயம் கேட்க வேண்டும்" இதுதான் அந்த ஓவியரின் ஆசை.

உடனே இராமகிருஷ்ணரின் படத்தை வரைந்து முடித்தார். அதை எடுத்துக் கொண்டு போனார். இவர் போன சமயம் அங்கே இராமகிருஷ்ணர் சீடர்களுடன் உட்கார்ந்திருந்தார். விவேகானநதரும் அங்கே இருந்தார்.

இந்த ஓவியர் தான் வரைந்த ஓவியத்தை அவரிடம் காட்டினார். இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஓவியத்தை இராமகிருஷ்ணரிடமே காட்டினார். இராமகிருஷ்ணர் என்ன செய்தார் தெரியுமா? அந்தப்படத்தைப்பார்த்து அதன் காலைத் தொட்டார்.

குரு தேவருடைய. இந்தச செயல் சீடர்களுக்கு வியப்பை உண்டு பண்ணியது. சிலபேர் மனதிற்குள்ளேயே குழம்ப ஆரம்பித்து விட்டார்களாம். "என்ன இது? இது அவரது படம். அவரே அவரது படததின் காலைத் தொடுகிறார்" என்று யோசித்தார்கள். சிலபேர் ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். "தனது காலைத்தானே தொடும்இவரது செயல் பற்றி என்ன நினைக்கின்றாய்?" என்று அவர்களும் குழம்பிப் போய் நின்றார்கள்.

அநதப் படத்தை வரைந்து அவரிடம் காட்டிய அந்த ஓவியருக்கும் அதிர்ச்சி. இருந்தாலும் அவர் சீடரல்ல. அதனால் கொஞ்சம் துணிவை வரவழைத்துக் கொண்டு கேட்டார். "என்ன இது. என்னால என் கண்களை நம்பமுடியவில்லை. இது உங்கள் சொந்த உருவப்படம். நீங்கள் உங்கள் சொந்தக் கால்களையே தொடுகிறீர்கள். இது எங்களுக்குக் கொஞ்சம் சங்கடமாக உள்ளதே" என்றார்.

இராமகிருஷ்ணரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்ததாம்.அவர் சொன்னார் "இது எனது படம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இது எனது படம் என்பதனால் நான் இதன்காலைத தொடவில்லை! நீ எனது சமாதி நிலையை இந்தப் படத்தில் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றாய் அதனால அதன் காலைத் தொடுகிறேன்.

சமாதி நிலையில் யார் இருந்தாலும், அது எனது படமாக இருந்தாலும் சரி. அல்லது வேறு யாருடைய படமாக இருந்தாலும் சரி. படம் யாருடையது என்பது முக்கியமல்ல. இதில் எது முக்கியமென்றால் அது தன்னை உணர்ந்த ஒரு உணர் நிலையின் படம். அப்படியிருக்கும் போது அதன் காலை நான் தொட வேண்டும்.அதற்கு நீங்கள் எல்லோரும் ஏன் சங்கடப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை" என்றாராம்.

இப்போது தான் அங்கே இருந்த சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் விபரம் புரிந்ததாம். "இதற்கு முன் யாரும் செய்யாததை இவர் செய்திருக்கிறார். அவரது காரணம் மிகவும் நியாயமானது" என்பதை உணர்ந்தார்களாம்.

இதுவரை ஆன்மீகத்தில் சமாதிநிலை அதாவது தன்னை உணர்ந்த நிலைபற்றிப் புரிந்து கொணடோம். இல்லறத்தில் ஏற்படக் கூடிய சமாதி நிலை பற்றி உங்களுக்குத் தெரியுமா?

ஒரு அம்மா டாக்டரிடம் வந்து சொன்னாராம் "டாக்டர் என் வீட்டுக்காரருக்கு ஏதோ கோளாறு என்று நினைக்கிறேன். நான் எவ்வளவு நேரம் பேசினாலும் காதில் விழாதது மாதிரி இருக்கிறார்" எனறாராம் அதற்கு அந்த டாக்டர் "அது உடம்புக் கோளாறு இல்லை அம்மா.அது ஒரு பெரிய திறமை" என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆலயத்தில் திருடும் முயற்சி முறியடிப்பு

கூரை பிரித்து ஆலயத்துள் இறங்கி திருட முற்பட்ட நபர் அயலவர்களால் பிடித்து எச்சரித்த பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி சித்தன்கேணியில் உள்ள சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று மேற்படி ஆலயத்தின் கூரை ஓடுகளைக் கழற்றி ஆலயத்துள் இறங்கிய ஒருவர் ஆலயத்துள் இருந்த பெறுமதி மிக்க பொருட்களை கொள்ளையிட முற்படுவதைக் கண்ட ஆலயப் பூசகர் கூச்சலிட்டதைத் தொடர்ந்து அங்கு திரண்ட அயலவர்கள் திருடனைப் பிடித்து எச்சரிக்கை செய்த பின் விடுவித்துள்ளனர். (உ)

# இடைக்கால நிர்வாக விவகாரம்

# அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கூட்டமைப்பு சர்வதேசத்தைக் கோரும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தையும் எதிர்கட்சியையும் வலியுறுத்துமாறு சர்வதேச நாடுகளிடம் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக் கோரவுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே, இடைக்கால நிர்வாக சபை குறித்த கோரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் வலியுறுத்தி வருவதாக யாழ். மாவட்ட பாராளுமனற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இவ்விடயம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த மாத நடுபபகுதியில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்தபோது இடைக்கால நிர்வாக சபையை முன்நிலைப்படுத்தியே சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

ஆனாலும் இச்சந்திப்பிற்கு இரண்டு தினங்களுக்குப் பின்னா நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் ஜனாதிபதி சந்திரிகா இதற்கு எதிர்மாறான கருத்தை வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆர்ம்பிக்கும்போது இடைக்கால நிர்வாக சபை குறித்த விடயத்தை பேச்சுக்களுககான அட்டவணையில் முதல் அம்சமாக இணைப்பதற்கு அரசிடம் அழுத்தம் கொடுக்கும் நகர்வுகளையும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு முன்னெடுக்கும் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

# ரவியை 10 தடவைகள் கைது செய்வதற்கு போதிய சான்றுகள் என்னிடம் உள்ளன

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்காவை பத்து தடவைகளுக்கு மேல் கூட சிறைக்கு அனுப்பமுடியும். அதற்கான சான்றுகள் தன்னிடம் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



முல்லேரியாவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த ஜனாதிபதி, ரவி கருணாநாயக்காவிற்கு தற்போது நீதிமன்றம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளைப் பற்றி எதுவும் கூறவில்லை.

மேலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களையும், ரணில் விக்கிரம சிங்கவையும் தாக்கிப் பேசியதோடு கடந்த ஆட்சிக் காலததில் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு முழுப பொறுப்பையும் ரவி கருணாநாயக்காவே ஏற்க வேண்டும் என்றார்.

தொடர்ந்தும் கூறுகையில்,அந்த ஆட்சியின் போது 30ரூபாவிற்கு வற்கப்பட்ட பொருட்கள் சதொசவில் 60 ரூபாவிற்கு வி[illegible]கப்பட்டன. ரவிகருணாநாயக்க பல்வேறு ஊழல்களிலும், மோ[illegible]டிகளிலும் ஈடுபட்டுள்ளார் என்றார்.

அத்துடன், முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவிற்கு எதிராகவும் தான் கடும் நடவடிக்கை எடுக்க விருப்பதாகத் தெரிவித்தார். திஸாநாயக்கா 830 மில்லியன்களை தவறான முறையில் பயன்படுத்தியிருந்தார் என்றும் இது பறறிய உண்மைகள் விரைவில் வெளியாகும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். (உ-6)

# நிருபம் சென்னின் இடத்திற்கு நிருபாம ராவோ நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நிருபாம ராவோ நேற்று நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய அரச வட்டாரச் செய்திகள் தெரிவித்துள்ளன.

தற்போது பதவி வகித்து வரும் நிருபம் சென் ஜக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ள நிலையிலேயே இப்புதிய நியமனம் குறித்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இநதிய அரசின் வெளிவிவகார அமைச்சில் மேலதிக செயலாளராக கடமையாற்றும் நிருபாம ராவோ பல வெளிநாடுகளில் கடமையாற்றிய அனுபவம் பெற்றவராவார்.

ஏறகனவே கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவராலயத்தல் கடமையாற்றிய அனுபவம் கொண்ட நிருபாம ராவோ விரைவில் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவுள்ளார். (உ)

# இராசி பலன்

**09.07.2004**
**(ஆனி 25,வெள்ளிக்கிழமை)**
**சப்தமி காலை 6.30 மணி வரை**
**ரேவதி முழுவதும்**
**இராகுகாலம் 10.28-11.58 மணி வரை**
**சுபநேரம் 5.58-7.28 மணி வரை**
**அட்டமி நவமி**

**மேடம்**
சயன சுகக்குறைவு, காரிய அலைச்சல், தெய்வ சிந்தை, பண விரயம்.

**இடபம்**
காரிய அனுகூலம், பெருமையடைதல், தெய்வ தரிசனம், போசன நன்மை.

**மிதுனம்**
காரிய அனுகூலம் அதிக பிரயாசை, நல்ல செய்தி, புதிய திருப்பம்.

**கடகம்**
பித்த ரோகம், குடும்ப நலம், புதிய திட்டமிடல், காரிய தாமதம்.

**சிங்கம்**
அமைதிக் குறைவு, கலகம், வாகன பயம், காரிய தாமதம்.

**கன்னி**
சென்ற இடத்தில் செல்வாக்கு, போசன சுகம், முயற்சி கைகூடும், தெய்வ தரிசனம்.

**துலாம்**
செய்தொழில் விருத்தி, எடுத்த கருமங்கள் கை கூடும், பொருள் சேர்க்கை, உடல் நலம்.

**விருச்சிகம்**
வியாபார நன்மை, மனப்பதற்றம், நல்ல முயற்சி, உடல் நலக்குறைவு.

**தனுசு**
கல்வியில் ஆர்வம், காரிய தாமதம், திருடர் பயம், போசன சுகக் குறைவு.

**மகரம்**
உறவினர் உதவி, காரிய சித்தி, தனவரவு, தெய்வ தரிசனம்.

**கும்பம்**
மாதர் நட்பு, உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாதம், தன விரயம்.

**மீனம்**
தெய்வ சிந்தை, தேகநலன், போசன சுகம், தொழில் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்பால் பங்குச் சந்தையில் பெரும் தாக்கம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து இலங்கையின் பங்குச் சந்தையில் பெரும் வீழ்ச்சியடைந்ததாக பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதி 30 வீதத்தினால் உடனடியாகவே வீழ்ச்சியடைந்துள்ளதை பங்குச் சந்தை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

இதேவேளை, இந்தச் சம்பவத்தினால் இலங்கையின் முதலீடுகளைச் செய்வதற்கு வெளிநாட்டவர்கள் அஞ்சுவார்கள எனறு தெரிவித்துள்ள ஹற்றன் நசனல் வங்கியின் முகாமையாளர், உல்லாசப் பயணிகளின் வரவையும் இது வெகுவாகப பாதிக்கும் என்றும் கூறியுள்ளார்.

இந்நிலைமையை உணர்ந்து அரசியல் தலைவர்கள் சரியான முடிவுகளை எடுக்காவிட்டால், இது நாட்டின் பொருளாதாரததை மேலும் பாதிப்புக்களுக்குள்ளாக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (உ)

## விபத்துக்களில் மூவர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஏற்பட்ட பல்வேறு விபத்துச் சம்பவங்களில மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பரந்தன் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அதில் பயணித்த கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பரமேஸ்வரன் கபிந்தன்(வயது 26) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக முச்சககர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவரும் கணேசபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவரும் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-8)

# வெள்ளி முற்றம்

# அவளுக்குத் தான் தெரியும்

மீனா அருணாசலம்
சாவகச்சேரி

கண்டி வீதியைக் கடப்பதற்காக சைக்கிளிற் காத்துக் கொண்டிருந்த மதிக்கு வெறுப்பும் சினமும் தோன்றின. முகமாலைப் பாதை திறந்து தென்னிலங்கைப் பயணம் தொடங்கிய நாளிலிருந்து கண்டி வீதியைக் கடப்பதென்பது இலகுவான காரியமல்ல. சைக்கிளின் கூடையில் அவளுடைய பத்து மாதக் குழந்தை பானுஜா இருந்து வீதியாற் போய் வரும் வாகனங்களைக் கண்கொட்டாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிரபஞ்சத் துயரை

கழுத்தைத் தடவியபடி மறுபக்கம் குழந்தையை மாற்றிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். எதிர்பார்க்காமலே மகளைக் கண்டதும் தாய் திகைத்துப்போனாள். "என்னடி இந்த வெயிலுக்குள்ளால பிள்ளையையும் கொண்டு வாறா. வெயிலாற வரக்கூடாதோ" அம்மாவின் அறிவுரைகளைக் கேட்காமலே, குசினிக்குள் நுழைந்து பலகையில் இருந்தாள். "சரியாக் களைச்சுப் போனன் தண்ணி தாம்மா" என்றவள் இப்படி உரிமையோடு கட்டளையிட்டு எத்தனை நாளாய்ப்போய்விட்டது என்று மனதுக்குள் நினைத்தபடி சமையல் செய்து கொண்டிருக்கும் அம்மாவின் ஆயத்தங்களைப் பார்த்தாள்.

செம்பிலே தண்ணீரைக்

தெரிந்து விடக் கூடாதே என்ற கவனம் அவளுக்கு. சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் பாடம் புகட்டும் ஆசிரியனைப் போல் துவரம் கம்பெடுத்து அந்த மெல்லிய தோலில் பதம் பார்க்கும் முரட்டுக் கணவனின் அன்பை அசிங்கத்தை அம்மாவுக்குக் காட்டக் கூடாதென்றே கழுத்தை மூடும் சட்டையை அணிந்துகொண்டு வந்திருந்தாள் மதி. நல்லவேளை, கழுத்தில் இருந்த நகைகள் தாயின் கண்ணிற் பட்டனவேயன்றி தழும்புகள் தெரிந்து விடவில்லை என நிம்மதியடைந் தாள்.

"என்னடி நான் சொல்லுறன் நீ பேசாமலிருக்கிறாய். நானென்ன பொறாமையிலா சொல்லுறன்."

"அம்மா எனக்குத் தெரியும் நீங்கள் எதற்குச் சொல்லுறீங்கள்

புலப்படாமல் கலங்கினாள் மதி. "அப்பா தோட்டத்துக்குப் போய்ற்றார்வீட்டைக் கொஞ்சம் கொஞ்சமாய் திருத் துவம் எண்டால் காசு கையில இருந்தால்த் தானே? போன மாசம் தம்பி அனுப்பிய காசில நாலு பை சீமெந்து வாங்கினது கல்லறுக்க ஆளைப் பிடிக்க வேணும். காசு கையோட கொடுக்க வேணும் . என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல" என அம்மா

யையார எண்ணிப் பார்த் தார்களா? கல் வீட்டில காற்றை வாங்கிப் பொழுதைப் போக்கிச் சின்னத் திரையில் மூழ்கி இருக்கும் மனிதர்களின் சின்ன

துவும் தெரியாத அந்தக் குழந்தை போலக் காலமெல்லாம் இருப்பேன் எனக் கனவுகண்ட அவள் வாழ்வு கலைவதாக உணர்ந்து கொண்டாள்.

சைக்கிள் கூடையில் பானுஜா இல்லாவிட்டால் ஒரு சமயம் வேகமாய் வரும் வாகனத்திற்குக் குறுக்கே பாய்ந்தும் இருப்பாள். ஆனால் அப்படி உயிரை மாய்த்துக் கொள்வதற்காகவா இவ்வளவு துன்பங்களையும் இத்தனை நாட்கள் சுமந்து குழந்தையைப் பெற்றாள். இல்லையே, ஏதோ ஒரு பிடிவாதம் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று வாழ்ந்து முடிப்பேன் என்ற நம்பிகை "எடுத்த காவடியை ஆடி முடித்துத் தானே இறக்க வேண்டும்" என அம்மா அடிக்கடி சொல்லும் பழமொழியின் அர்த்தம் இன்னும் அர்ப்பமாய் இருக்கும் வாழ்க்கை மீதான ஆசை கட்டிய கணவனையும் பெற்ற பிள்ளையையும் நாளை தனியே விடக் கூடாதே என்ற ஏக்கம் இவையெல்லாம் அவளை அப்படியொரு முடிவுக்குப் போகாதபடி வாழ்வில் தெம்பூட்டிக் கொண்டிருந்தன.

மதிக்குக் கவலையெல்லாம் வீட்டில் அம்மா அப்பாவுக்கு என்ன சொல்லுவது? ஒரு லட்சம் பணத்திற்கு எங்கே போவார்கள் அன்றாடம் செலவுக்கே அங்க இங்க கடன் வாங்கும் அவர்களிடம் எப்படிக் கேட்பது? எதைச் சொல்வது? எதை மறைப்பது? சீதனமே வேண்டாமென்று காதலித்த கணவன் கல்யாணம் என்று வந்ததும் தன்னுறவினர் மூலமாக "பெண்ணைத் தனியாக அனுப்புவது உங்களுக்கு அழகில்லைத் தானே" என நாகரிகமாகக் கேட்டதும் திருமண வைபவத்தை ஆடம்பரமாகச் செய்ய வேண்டுமெனக் கூறியதும் எல்லாம் நடந்து முடிந்த பின் மதியைப் பணம் வேண்டி வரும்படி அனுப்புவது இவ்வளவு நாளும் பெற்றோரின் துன்பதைத்தைக் கூறிச் சமாளித்ததுவும், இறுதியில் வீட்டுக்கே பிள்ளையுடன் செல்ல வேண்டிய நிலையும் வந்துவிட்டதை எண்ணி வருந்தினாள். இப்படியான நிலைமையைக் கனவிற்கூட எண்ணிப் பார்க்காத மதிக்கு ஏமாற்றமான வாழ்க்கையே ஏற்பட்டு விட்டதை யாவரும்

கொடுத்தபடியே "மதி உனக்கு எத்தனை நாள் சொல்லுறனான் தனிய வெளிக்கிடேக்க எல்லா நகை களையும் போடாதையெண்டு கழுத்தில் ஒரு சங்கிலி காணாதோ" அம்மாவின் கவலை அவளுக்குத் தெரியாமலில்லை. "கள்ளர் காடர் பயம் ஒரு புறமிருக்க இவ் வளவு கஷ்டத்தில இருந்த நாங்கள் கல்யாணம் செய்ததும் அவ்வளவு நகைகளையும் கழுத்தில மாட்டிக் கொண்டிருந் தால் அயலட்டைச் சனம் பொறுத்துக் கொள்ளாமல் வயிறெரியுங்கள் அதுகளின்ர வயிறெரிச்சலால் உனக்கேதும் ஆகிவிடுமோ என்று தான் பயப்படுறன்" அம்மா கண்களைத் துடைத்தபடி சொன்னாள்.

ஆனால் தன்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பதாகவும் எல்லாவித நகைகளையும் மனைவிக்குச் செய்து போட்டு அவளைத் தங்கப் பவுணாக மற்றவர்களுக்குக் காட்ட அல்லவா அவள் கணவர் அந் நகைகள் எல்லாம் அணிய வேண்டுமென்று பணித்திருக் கின்றார். வீட்டிலே இருந்து வெளிக் கிடும்போது கண்ணாடியின் முன் நின்று கழுத்துப் பட்டையில் இருந்த 'சிவப்புத் தழும்புகளைப் பார்வையிட்டவளுக்கு சட்டையைப் போடுவதே நல்லதாகப்பட்டது. சேலை கட்டினால்

எண்டு அந்தக் கதையை விடுங்கோ. அப்பா எங்கே?"

தன் கஷ்டங்களை அடுக்கிக் கொண்டே போனாள்.

குசினியோட ஒரு அறையை மட்டும் திருத்தினபடி மற்ற வீடெல்லாம் இடிந்தபடியே இருக்க அதில் குயிருக் கும் பெற்றோரையும், அவளது சகோதரங்களையும் அவர்களின் நிலையையும் யாராவது எண்ணிப் பார்த்தார்களா? வாரம் ஒருநாள் கிடைக்கும் லீவில் வரும் சகோதரர்கள் பகலில் மட்டும் தாய் தகப்பனுடன்

முகத்தை எண்ணி ஏங்குவதா? எதுவுமே புரியாமல் கண்ணீரை மட்டும் சிந்தியபடி மதி அம்மாவைப் பார்த்தாள்.

அம்மா வீடு இடிஞ்சவைக்கு அரசாங்கம் 25,000 ரூபா கொடுக்குதெல்லே அதுகிடைச் சதும் அவரின்ர காசைக் கொடுக் கிறீர்களே தாய் எதுவுமே புரியாமல் மகளை உற்றுப்பார்த்தாள். "மதி நாங்கள் மறக்கேல்லையடி . வீட்டைத் திருத்திப் போட்டா நல்லதெல்லோ. 25,000 என்னத்தைக் காணப்போகுது மிச்சத்திற்கு என்ன செய்யிறது ஏதாவது கதைச்சவையே காசு தரேல்லயெண்டு"

"அம்மா உங்கட கஷ்டம் எனக்குத் தெரியும் அதுதான் இவ்வளவு நாளும் நான் வாய் திறக்கேல்ல. ஆனா இப்ப காசை வாங்கிவா எண்டு அனுப்பிவைச் சிருக்கிறார் அதுதானம்மா வந்தனான்."

"மதி என்னடி அப்படிக் காசுக்கு அவசரம்?" தாயின் இயலாமை வினாவாக மாறியது. "அப்படியேதும் அவசரம் இருப்பதாய் எனக்குத் தெரியேல்லா வட்டிக்குக் குடுப்பம் என்று யோசிச் சிருப்பார்" மதி வெறுப்பாகக் கூறிக்கொண்டு மடியிற் தூங்கிப் போன குழந்தையைத் தூக்கிப் பாயில் வளர்த்தினாள். எத்தனை நாளுக்கு இங்கே இருக்கப் போகிறேன் என்று அவளுக்கே தெரிய வில்லை.

"இரண்டு மணியாகப் போகுது மதி. பிள்ளை எழும்பிற துக்கிடையில சாப்பிடன்" அம்மாவின் அக்கறை அவள் மனதுக்கு இதமாயிருந்தது. அவர் வீட்டில் யாராவது சாப்பிட்டியா என்று உபகாரத்திற்காவது கேட்பார்களா? மனம் கனத்தது. கணவனுக்கு யார் சாப்பாடு கொடுப்பினம். பக்கத்தில் நின்று ஒவ்வொன்றாகப் போட்டுக் கொடுத்தால்த்தானே திருப்தி. என்ன தான் அடித் தாலும் கணவனுடன் இருப்பதில் நிம்மதியே என்று கூடப்பட்டது அவளுக்கு. கண்களில் இருந்து கண் ணீர் தாரையாக ஓடியது. "மதி ஏனம்மா அழுகிறாய்?"தாய் தான் பக்கத்தில் இருந்து கேட்டாள் "ஒண்டு மில்லையம்மா" எல்லாமே போனது போல் இருந்தாலும் வாய் ஒன்று மில்லை என்றே முணு முணுத்தது.

மதி வீட்டுக்கு வந்து வாரங்கள் இரண்டு ஓடின. "மதி, இன்றைக்கு வீட்ட போம்மா. அப்பா பின் னேரம் காசு கொண்டு வந்து அவரிட்டைக் கொடுப்பார்" அம்மாவின்வர்த்தைகள் அவளை ஏதோ செய்தன. பெற்றவளின் உயிரைக் குடிக்கின்றேனோ எனத் எண்ணத் தோன்றியது அவளுக்கு. இருந்தாலும் வேறு வழி தெரியாத தால் குழந்தையைத் தூக்கிக்கொண்டு பயணமானாள். அம்மாவுக்குப் பேரின்பம். ஒரு பிள்ளையாவது நிம்மதியாக இருக்கட்டுமே. இவ்வளவு காலமும் இந்தக் கொட்டிலில இருந் திட்டம். இனியும் இருப்போம். ❋



அறியும் நிலையும் இன்று வந்து விட்டது.

நீண்ட பெரு மூச்சொன்றை விட்ட படி வீட்டிற்கு வந்த மதி சைக்கிளை நிறுத்திவிட்டு குழந்தையைத் துக்கித் தோளிலேபோட்டவளுக்கு கழுத்து வலித்தது .

கட்டாயம் தழும்புகள் தெரியும். அம்மாவின் கண்களுக்கு அவை

பேச்சைத் தொடங்கவா? முடிக்கவா? மாற்றவா? எதுவுமே

நின்று விட்டு இரவில் உறவினர் வீடுகளிற்குச் சென்று தங்கும் நிலை

# மீடியாக்களின் தொல்லை தவிர்க்க

## படிக்கப்போகிறார் ஷரபோவா

விம்பிள்டன் சம்பியன் மரியாஷர போவாவிற்குத் தேவை தனிமை. அவர் எங்கே சென்றாலும் மீடியாக் கூட்டம் முற்றுகையிடுவதால் சங்கடப்படுகிறார். லண்டனில் நடந்த விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் பிரிவில்





17வயது ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா சம்பியன் பட்டம் வென்றார். செரினா வில்லியம்சை சர்வ சாதாரணமாக (6-1,6-4) வீழ்த்தியதன் மூலம் வெகு பிரபலமாகிவிட்டார். டென்னிஸ் பயிற்சிக்காக அமெரிக்காவின் புளோரிடாவில் வசிக்கிறார் மரியா. நியூஹேவன் பகுதியில் டென்னிஸ் மையம் ஒன்றில் நடந்த நிகழ்ச்சியில் நேற்றுப் பங்கேற்றார். அங்கு ஷரபோவா நிருபர்களிடம் பேசுகையில்,

இப் போதெல்லாம் நான் எங்கு சென்றாலும் மீடியாக்கள் என்னை சுற்றிவளைத்து கேள்விகளால் தொல்லை செய்கிறார்கள். ஏதாவது சாதித்து விட்டால், இப்படிப் பட்ட தொந்தரவுகள் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். இதெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால், இனி மேல் எந்தப் போட்டியிலும் ஜெயிக்கக்கூடாது. ஆனால் அது முடியாத விஷயம். இப்போது எனக்குத் தேவை யெல்லாம் தனிமை மட்டுமே. நியூயோர்க் நகரில் சில நாட்கள் எனது தோழிகளுடன் ஜாலியாக ஷொப்பிங் செய்யவிரும்புகிறேன். பிற்பாடு புளோரிடா சென்று படிப்பைத் தொடரவேணடும என்கிறார். இடைவிடாமல் டென்னிஸ் ஆடினாலும், 17வயது ஷரபோவா இன்டர்நெட் மூலம் தனது உயர் நிலைப் பள்ளி வகுப்பை ஆர்வமாகத் தொடங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (யே)

# ஆசியக் கிண்ணக் கிரிக்கெற்

## இம்மாதம் 16-ல் ஆரம்பம்

ஆசிய கோப்பை கிரிக்கெற் தொடரில் இந்தியா, இலங்கை அணிகள் 'பீ'பிரிவில் இடம்பெற்றுள்ளன. இந்தியா தனது முதல் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட் அணியை சந்திக்கிறது.



இலங்கையில் எதிர்வரும் 16-ல் ஆசிய கோப்பை கிரிக்கெற் துவங்கிறது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் அறிமுக நாடான ஹொங்கொங் உட்பட 6 அணிகளும் பங்கேங்கின்றனர். இவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் 'ஏ' பிரிவில் பாகிஸ்தான், வங்கதேசம், ஹொங்கொங் அணிகளும் 'பீ' பிரிவில் இந்தியா, இலங்கை, ஐக்கிய் அரபு எமிரேட் அணிகளும் இடம்பெற்றுள்ளன.

முதல் கட்ட லீக் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் மோதுகின்றன. இரண்டு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இரண்டாம் கட்ட லீக் சுற்றுக்கு தகுதி பெறுகின்றன. இதிலிருந்து அதிக வெற்றிகளைக் குவிக்கும் இரண்டு அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

முதல் போட்டியாக வரும் 16-ல் இந்திய அணி, ஐக்கிய அரபு எமிரேட்டை எதிர்த்து விளையாடுகிறது. இந்த போட்டி தம்புல்ல நகரில் பகலிரவுப் போட்டியாக நடக்கிறது. கொழும்பில் நடைபெறும் மற்றொரு போட்டியில் வங்கதேசம் ஹொங்கொங்கை எதிர்த்து விளையாடுகிறது. இறுதிப் போட்டி ஆகஸ்ட் 1-ல் நடக்கிறது. (யே-68,61)

# கோபா கால்பந்தில் கொலம்பியா வென்றது

கோபா அமெரிக்க கால் பந்து தொடரில் கொலம்பியா 1-0 என்ற கோல் கணக்கில் வெனிசுலாவை தோற்கடித்தது பெரு நகரில் கோபா அமெரிக்க கால்பந்து சம்பியன்ஷிப் போட்டிகள் நேற்று துவங்கின. இதன துவக்க




போட்டியில் ஏ பிரிவில் கொலம்பிய அணி வெனிசுலா அணியை சந்தித்தது. இந்த போட்டியில் இரு அணிகளுமே கோல்அடிக்க கடுமையாக போராடின. ஆட்டத்தின் 22வது நிமிடத்தில் கொலமபிய அணிக்கு பெனால டிகிக் வாய்ப்பு கிடைத்தது இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு இந்த அணியின் டிரஷர் மாரனோ முதல் கோலை அடித்தார்.

இதன் பின்னர் இரு அணிகளும கோல் அடிக்க இயலவில்லை. இதனால் கொலம் பியா1-0என்ற கோல் கணக கில் வெனிசுலாவை வழ்த்தியது. மற்றொரு லீக் போட்டியில் நடத்தும் நாடான பெரு அணி பொலிவியாவை சந்தித்தது. இந்த போட்டியின் முதல் பாதியில் பொலிவியா 2-0என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இந் நிலையில் இரணடாவது பாதியில் பெரு தாக்குதல் ஆட்டத்தை ஆடியது. இதற்கு நல்ல பலன் கிடைத்தது. இந்த அணியின் கிளாடியோ பசாரோ, ராபர்டோ பால சியோஸ் அடுத்தடுத்து கோல அடித்தனர். இதனால் இந்த போட்டி 2-2என்ற கோல் கணக்கில் சமநிலையில் (யே)

# இலங்கை வீரர்களுக்கு ஜெயசூரிய அறிவுரை

எதிரணியின் பவுன்சரை கண்டு அஞ்சாமல், வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்துமாறு இலங்கை வீரர்களுக்கு துவக்க ஆட்டக்காரர் ஜெய சூரிய அறிவுரை கூறி உள்ளார். இலங்கை கிரிக்கெற் அணி தற்போது




அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொணடு வருகிறது. இந்த அணி கடந்த வாரம டார்வினில் நடந்த முதல் டெஸ்டில் 149 ரன்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா விடம் தோல்வியை தழுவியது. இந்த போட்டியில் முதல் இன்னிங்ஸில் மெக்ராத் 5,காஸ்ரோவிச் 7விக்கெற் வீழ்த்தினர். இந்த போட்டியை போல விளையாடாமல், துடிப்புடன் விளையாடுமாறு இலங்கை வீரர்களுக்கு தைரியம் தந்துள்ளார். முன்னாள் கப்டன் ஜெயசூரிய இவர் முதல் டெஸ்ட்டின் 2இன்னிங்சிலும் 8,16 ரன்களை மட்டுமே எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று கெயர்ன்ஸ மைதானத்தில் 2வது டெஸ்ட் துவங்கிறது.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் பொதுவாக பவுன்சர்களை வீசுவதில்லை இலங்கை வீரர்களும் இது போன்ற பந்துகளை அதிகமாக சந்தித்தது இல்லை. எனவே இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் வீரர்கள் (இலங்கை) துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கெயர்ன்ஸ் மைதானம் நன்றாகவே உள்ளது. இதில் நம்பிக்கையோடு களமிறங்கினால் ரன்களை குவிக்கலாம். கடந்த போட்டியில் இலங்கை அணியில் பார்ட்னர் ஷிப் குறிப்பிடும்படி இல்லை. இந்த தவறை கட்டாயம் நாங்கள் திருத்திக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்றார் ஜெய சூரியா. (யே)

# சுவிஸ் பகிரங்க ரெனிஸ் பெடரர் இரண்டாம் சுற்றில்

சுவிஸ் ஓபன் டென்னிஸ் இரண்டாவது சுற்றுக்கு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தகுதி பெற்றுள்ளார் சுவிட்சர்லாந்தில் உள்ள இஸ்டாட் நக



ரில் சுவிஸ் ஓபன் டென் னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் நேற்று முன் தினம் நடந்த முதல் சுற்றுப்போட்டியில். சுவிட்சர்லாந்தை சேர்ந்த விம் பள்டன் சம்பியனான ரோஜா பெடரர் 6-1,6-1என்ற நேர் செற்களில் ஜெர்மனியை சேர்ந்த தோமஸ் பேரண்டை தோற்கடித்தார்.

இது பெடரர் கடந்த 22போட்டிகளில் விளையாடி பெற்ற 21வது வெற்றி மற்றொரு போட்டியில் ஜெர்மனியின் ரெயினர் ஸ்கியூட்லர் 6-4,1-6, 6-3 என்ற செட்களில் சுவிட்லாந்தின் மிக்கோல் கிரடோக்வில்லை தோற்கடித்தார். ஸ்பெயின் வீரர் ஜுவான் கார்லோஸ் பெரேரா 7-6,6-4என்ற செட்களில் சுவிசர்லாந்தின் அவுஸ்திரேலியாவின் ஸ்டீபன் கோபக்கையும், சுவிட்சர்லாந்தின் மார்க்ரோசட் 7-6,6-4 என்ற செட்களில் ரோமேனியாவின் அன்டிரே பாவலை தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (யே)

# விளையாட்டுச் செய்திகள்





ஒலிம்பிக்கிற்கு இன்னும் 36 தினங்கள்

## ஒலிம்பிக் வரலாறு 20

# 1984ல் லொஸ் ஏஞ்சல்ஸில் இடம்பெற்ற 20வது ஒலிம்பிக்

நான்கு வருடங்களுக்கு முன்னர் மொஸ்கோவில் இடம்பெற்ற ஒலிம்பிக்கை அமெரிக்கர்கள் பகிஷ்கரித்தமையை நினைவிலிருத்திக்கொண்டு 1984ல் லொஸ்ஏஞ்சர்ஸில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளைச் சோவியத் ரஷ்யா பகிஷ்கரித்தது.



அமெரிக்க வீரர் ஜெஸி ஒவன்ஸ் முன்னர் ஏற்படுத்திய ஒலிம்பிக் சாதனையை இன்னுமொரு அமெரிக்க வீரரான கார்ல் லூயிஸ் முறியடித்தார். 100மீற்றர், 200மீற்றர், 4x100மீற்றர் அஞ்சல் ஓட்டம், நீளம் பாய்தல் ஆகிய. நிகழ்ச்சிகளில் லூயிஸ் தங்கப்பதக்கங்களை வென்றார். பின்னர் ஒலிம்பிக் சாதனையாகத் தனது வாழ்நாளில் அவர் பத்துத் தங்கப்பதக்கங்களை வென்றார்.

ஜிம்நாஸ்டிக் நிகழ்ச்சிகளில் ருமேனியாவின் எக்காத்தரீனா ஸாபோ நான்கு தங்கப்பதக்கங்களை வென்றார் தொழில் ரீதியான உதைபந்தாட்ட வீரர்கள் ஒலிம்பிக்கில் பங்கெடுக்க இங்குதான் அனுமதி வழங்கப்பட்டது.

57லட்சம் பார்வையாளர்கள் இங்கே நேரடியாகக் கலந்துகொண்டனர். தொலைக்காட்சியில் மிகப்பரவலான வர்த்தக விளம்பரங்களுடன் இப்போட்டிகள் உலகம் முழுவதும் காண்பிக்கப்பட்டன. (யே)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**தமிழ்மொழியும் இலக்கியமும் II**

மணி - 2

ஆக்கம் :
திருமதி. செ. உமாகரன் (B.A)
ஆசிரியர் யா/நாவலர் மகாவித்தியாலயம்.
யாழ்ப்பாணம்.

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
இவ் வினாக்களுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்த மான தலையங்கமிடுக.**

(அ) இன்று மக்களிடையே ஏற்பட்டுள்ள யதார்த்த ஏக்கங்கள், தவிப்புக்கள் யாவும் எழுத்துருவில் வெளிக்கொண்டுவரப்படும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை மூடிமறைக்க அரசும் முதலாளித்துவமும் சேர்ந்து மேற்கொள்ளும் இருட்டடிப்புக்கள் யாவும் சமுதாய மக்களின் பார்வைக்காக அவர்களின் இன்னல்களில் பங்கேற்கும் சமுதாயமாக எமது சூழலை மாற்ற எழுத்துருவிலான வெளியீடுகள் பல வெளிக்கொணர்வேன் என்பன தொடர்பாக **நான் எழுத்தாளனனால** என்ற தலைப்பில் கற்பனைச் சித்திரம்.

(ஆ) வானளாவச் செழித்து வளர்ந்திருந்த மரங்களும், மரங்களையே விஞ்சி அந்நகரில் எழுந்திருந்த உயர்மாடிக் கட்டடங்களும், ஓரிரு மணித்தியாலங்க ளில் ஏற்பட்ட சூறாவளி அனர்த்தத்தால் அழிந்து மண்ணோடு மண்ணாக திறந்த வெளியரங்காக மாறிவிட்டதே. நகரின் சிறப்புக்கு எடுத்துக்காட்டப் படும் இந்த மகிள நகரின் செழிப்பைக் கண்டு வியநது, வியந்து வாய்விட்டுப் பேசாத நாவொன்றும் உண்டா? என்ற வகையில் ..... **பெருஞ் சூறாவளி வீச முன்பு, வீசும்போதும், வீசிய பின்பும் அந்நகரில் நீர் கண்ட காட்சிகள் பற்றிய வர்ணனை.**

(இ) கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நாடு பூராகவும் அலைந்தான். பெற்றோர் கூறிய அறிவுரைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கின் ஓசையாயின. தனது இளம் வயதுத் துடிப்பும், கொதித்தெழும் இரத்த வீறும் தந்தையை எதிர்த்து வீட்டைவிட்டுக் கிளம்பிய பரந்தாபன் திக்குத் தெரியாத காட்டில் அலைவதுபோலப் பித்துப்பிடித்து தவறான பழக்க வழக்கத்துக்கு அடிமையாகின்றான். தந்தை கூறிய நல்ல அறிவுரைகள் அவனின் இதயத்தை ஈட்டியால் குத்துவன போன்று அமைந்தது.... என்ற வகையில் "**தந்தை சொல்மிக்க மந்திரமில்லை**" முதுமொழிக்குப் பொருத்தமான . கற்பனை சிறுகதையொன்று எழுதுக.

(ஈ) இளைஞர்கள் ஒழுங்கான முறையில் வழிநடத்தப்பட வேண்டும். தலைமைத் துவத்துக்கான தகுதிகள் அவர்களிடையே புகுத்தப்பட வேண்டும். இரக்கம், உண்மை, பெருமை, ஈகை போன்ற விழுமியக் கருத்துக்கள் அவர்களின் மனத்தில் விதைக்கப்பட வேண்டும். சிறுவர் தொடக்கம் வயோதிபர் ஈறாக அனைவருடனும், அன்புடனும், அரவணைப்புடனும் பழகுவோராக அவர்களின் குறைகள் கேட்பவர்களாக இளைஞர்களுக்கான வழிகாட்டல் அமைய வேண்டும்.... "**இன்றைய இளைஞர்களே நாளை தலைவர்கள**" என்ற தலைப்பில் உமது கருத்துவெளிப்பாடு.

(உ)
கண்ணன் : மனிதன் என்பவன் மிருகமாக மாறிவிட்டானா?
பாலன் : ஓம் ஓம், இவ்வாறு கடைப்பாடின்றிதான் நினைத்ததைச் செய்பவ னாக மாறியதற்குக் காரணம் அவன் எதற்கும் பயப்படாத தேவையாகும்.
கண்ணன் : சரியாகச் சொன்னீர் எமக்கெல்லாம் மேலாக ஒரு சக்தியொன்று உண்டு என்ற எண்ணம் யாருக்காவது இப்ப இருக்கிறதோ?
பாலன் : சமய உணர்வேயின்றி நானே பெரியவன், நான் நினைத்ததைச் செய்ய முடியும் என்ற கொள்கையுடன் பெரியவர்களாகச் சமுதாயத்தை அழிப்பவர்களாக மாறத் தொடங்கிவிட்டனர்.
.......**மனிதன் அமைதியாக வாழ சமய நம்பிக்கை அவசியம்** என்ற தலைப்பில் ஓர் உரையாடல் எழுதுக. (30 புள்ளிகள்)

2.
பின்வரும் பந்திகள் ஒவ்வொன்றையும் ஏறத்தாழ 15-20 சொற்களில் அமையு மாறு சுருக்கி எழுதுக.

(அ) சரித்திரப் பாடத்தைச் சிறுவர்.சிறுமியர்க்கும்,பெரியவர்களுக்கும் கூட விபரிதமாகக் கற்பிக்கிறார்கள் .கேவலம் அரசர்களுடைய பெயர்களையும் சோனதிபதிகளுடைய பெயர்களையும் சண்டைகளைப் பற்றியாவது ,சில அரசர்களைப் பற்றியாவது சேனாதிபதிகளைப் பற்றியாவது கூறுவது மாத்திரம் சரித்திரம் ஆகாது. அவர்கள் சிந்தையில் வளர்ந்த எண்ணங்கள் எவை என்ற விஷயங்கள் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்.இவர்களின் ஆட்சி யைனால் சமுதாயத்துக்கு ஏறப்பட்ட மறுமலர்சி என்பவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும்.

(ஆ) உலகினில் மக்கள் வாழ்வினுக்கு இன்றியமையாத உண்மைப் பொருட்களைச் சிந்தைக்கு இனிய செவிக்கினிய வாய்க்கினியதாகிய அழசிய சொற்களால் இலக்கணவமைதி குன்றாது திறம்பட எடுத்துச் சொல்லுவோனே கவிஞர் எனப்படவான்.இத்தகைய கவிஞர் செய்த தனிச் செய்யுள்களும், பிரபந் தங்களும் தொகை நூல்களும் காவியங்களும் தமிழிலக்கியப் பரப்பிலே இவ்வளவென்று அளவிட்டுச் சொல்ல முடியாத வண்ணம் விளங்குகின்றன. இவற்றை விடக் இராமப்புறங்களில் தமது அலுப்பு நீங்கத் தம் மனத்துக்கு உகந்த பாடடுக்களைப் பாடிப்பாடி மகிழ்வோரும் உளர். இவை உணர்ச்சியால் பாடப்பட்டவை புலமையினால் பாடப்பட்வையல்ல.

(இ) நிலையில்லாமல் மாலும் அழகின்பத்தை நிலை பெறச்செய்து வேண்டும் போது இடைக்குமாறு செய்வதால்கலை தேவைப்படுகிறது என்பதை மேலே கண்டோம். நிலையாமையே உலகத்தின்இயற்கை என்பர்சான்றோர் யாக்கை. இளமை முதலியவற்றின் நிலையமைப்புப் புலவர் சிலர் உணர்ந்து பாடியிருக்கின்றனர். அவை மட்டும் அல்லாமல் அழகு, உணர்ச்சி என்பனவும் நிலையில்லாதனவாகவே மேற்கு வானத்தில் மாலையில் காணப்படும் அந்தி அழகு நொடிக்கு நொடி மாறிக் கொண்டே இருக்கிறது. உள்ளம் வியந்து போற்றும் அழகுமிக்க சிறந்த காட்சியை வானத்தில் கண்டு மகிழ்கிறோம். சிறிது நேரம் கழிந்தபிறகு மீண்டும் அதைக் கண்டு மகிழ விரும்பினால் அந்த அழகு புலன்களுக்கு எட்டாது ஒன்றாகி விருக்கின்றது.

(ஈ) மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வண்ணம் நம் பெரியவர் நமக்கு உதவிய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என உறுதிப் பொருட்கள் நான்கினையும் பற்றினவேயாம். இவையெல்லாம் நீதியின்பால் அமைந்தன வெனினும் இவற்றுள் பொருள் பகுதியைப் பற்றி எழுந்த நூல்களையே "**நீதி நூல்**" எனப் பெரியோர் வழங்குவார். அப்பொருட் பகுதியை மாத்திரம் சிறப்பாக எடுத்துக்கூறிய ஆசிரியரும் உளர். அதனோடு அறம் முதலிய ஏனைய உறுதிப் பயன்களையும் இயைத்துக் கூறிய ஆசிரியர்களே பெரும்பான்மையோராவர். அவருக்கு முன்னும் பின்னும் நீதிநூல் அருளிய ஆசிரியர்கள் வடமொழியிலும் தமிழிலும் பலரிருந்தனர். எனினும் வள்ளுவர் புகழ் உயர்ந்து வான்மதி போலத் திகழ்வதாகும். தாம் கூற மேற்கொண்ட பொருளை நன்றாக ஆராய்ந்தே இவ்வாறு தெளிவுபடுத்த வேண்டுமென்று உள்ளமைத்துப் பின்னர் செய்யுள் வடிவில் இவர் வெளியிட்டுள்ளார்.

(20 புள்ளிகள்)

3.
கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்துக் கிரகித்த பின் தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு விடை எழுதுக.

வீரக் கற்பு வாய்ந்த கண்ணகியின் கதையால் ஓர் அரசியல் உண்மையும் விளங்குகின்றது. நெறிதவறிய அரசனை அறமே ஒறுக்கும் என்னும் உண்மையை பாண்டியன் வரலாறு காட்டுகின்றது. அரண்மனைக் சிலம்பைக் களவாடிய கள்வன் அகப்பட்டான் என்று பொற்கொல்லன் சொல்லிய சொல்லை, ஆராய்ந்து பாராது, உண்மையை விசாரித்து அறியாது அக் கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக என்று பணித்தான் பாண்டியன். அரசன் ஆணையால் தன் கணவன் இறந்தான் என்றறிந்த கண்ணகி சீறி எழுந்தாள், " தீ வேந் தன் தனைக் கண்டு இத்திறம் கேட்பேன்" என்று புறப்பட்டாள். கருங் கூந் தல் விரிந்து கிடக்க கண்கள் கண்ணீர் வடிக்க கையில் ஒற்றைச் சிலம்பேந்தி காவலன் முன்னே தோன்றினாள். கோவலனிடமிருந்த சிலம்பு அரண்மனைச் சிலம்பன்று. தன் சிலம்பே எனப் பாண்டியன் திடுக்கிடப் பேசினாள். அந் நிலையில் மன்னவன் கைசோர்ந்து மெய் சோர்ந்தான்.

(1) கண்ணகியின் கதை விளக்கும் அரசியல் உண்மை யாது?
(2) கண்ணகியின் சீற்றத்திற்குரிய காரணம்?
(3) பாண்டியனிடம் சென்ற கண்ணகியின் கோலத்தை விபரிக்க.
(4) கண்ணகியின் வீரத்தைக் காட்டும் செயல்கள் எவை?
(5) "தீ வேந்தன் தனைக் கண்டு இத் திறம் கேட்பேன்" என்ற கூற்றை விளக்குக.
(6) பாண்டிய மன்னன் கைசோர்ந்து மெய்சோர்ந்தமைக்கான காரணம் என்ன?
(7) பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
1. நெறி 2. பணிந்தான் 3. ஒறுக்கும்

(15 புள்ளிகள்)

4)
பஸ்தரிப்பு நிலையங்களிலும் பிற இடங்களிலும் இன்று பிச்சைக்காரர் தொல்லை அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.
1. பாதசாரிகளுக்குக் கொடுக்கும் தொல்லை.
2. மதுபோதையில் நிற்றல்
3. சுத்தம் பேணாமை
4. கெட்ட வார்த்தை பேசுதல்
போன்ற காரணங்களால் ஏற்படும் தொல்லைகளை எடுத்துக்காட்டி செய்தித்தாள் ஆசிரியருக்குக் 100 சொற்கள் அளவில் கடிதம் ஒன்று எழுதுக.
(15 புள்ளிகள்)

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

2 மணித்தியாலம்

1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினா வுக்கும் விடை தருக

1. அ) "வாய் தந்தன பேசுவியோ மறை தந்த நாவால்"
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) மறைதந்த நாவால் என்பதன் கருத்து யாது?
(iv) இக்கூற்று இடம்பெற்ற சந்தர்ப்பம் என்ன?

ஆ) "முன் பெரும் நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப இன்பமார்ந்திருக்க"
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) இங்கு 'நீ' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

இ) "'....அறிவுக் கூர்மைக்கும் வயதுக்கும் தொடர்பு இல்லை என்பதை உங்களால் உணர்ந்து கொண்டோம்..."
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) ஏன் இக்கூற்றுக் கூறப்பட்டது?

ஈ) "அறிந்தும் இலன் இவ்வூரில் வழங்கும் நீதி அருவினையேன் ஆருமிலி அறவும் பாவி"
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) இக்கூற்று எந்த இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது?

உ) "தந்தையே நான் மீண்டும் இந்த தபோவனத்தைக் காண்பது எக்காலமோ?"
(i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
(iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv) இக்கூற்றைக் கூறுபவரின் உண்மையான தந்தையார்? தபோவனம் என்பது என்ன?

2. பின்வரும் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவற்றில் வரும் கதாபாத்திரம், குணவியல்பு எடுத்துக் காட்டப்படும் வகையினை விளக்குக.

(அ) ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால்
நேர வந்தவர் யாவராயினும் நித்த மாசிய பக்தி முன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப் புலந்து
ஈரம் மென்மதுரப் பதம்பரி வெய்த முன்னுரை செந்தழின்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## பகுதி I விடைகள்

| வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|
| 1. | (2) | 21. | (2) |
| 2. | (2) | 22. | (1) |
| 3 | (4). | 23. | (3) |
| 4. | (3) | 24. | (3) |
| 5. | (3) | 25. | (4) |
| 6. | (2) | 26. | (1) |
| 7. | (4) | 27. | (1) |
| 8. | (3) | 28. | (4) |
| 9. | (1) | 29. | (2) |
| 10. | (1) | 30. | (2) |
| 11. | (4) | 31. | (1) |
| 12. | (3) | 32. | (4) |
| 13. | (3) | 33. | (3) |
| 14. | (2) | 34. | (1) |
| 15. | (3) | 35. | (1) |
| 16. | (2) | 36. | (1) |
| 17. | (4) | 37. | (4) |
| 18. | (4) | 38. | (2) |
| 19. | (2) | 39. | (2) |
| 20 | (2) | 40. | (3) |

# புலிகளுடனான போரை எதிர்கொள்ள மாற்றாரின் தயவு எமக்குத் தேவையில்லை

## கருணா விவகாரத்திற்கு புதிய தளபதி முற்றுப்புள்ளி

முன்னைய படை அதிகாரிகளின் நடவடிக்கைகள் காரணமாக பல படையதிகாரிகளும், படைச் சிப்பாய்களும் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியிருப்பதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் சிறீ புத்தரகித்தர தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய படைத்தளபதியாக தற்போது பதவியேற்றுள்ள சாந்த ஹொட்டேகொட சகல படையினரையும் சமமாக மதிக்க வேண்டுமெனவும் தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய படைத்தளபதியாகப் பதவியேற்றுள்ள சாந்த ஹொட்டேகொட அஸ்கிரிய மகாநாயக்கரைச் நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்ற போதே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.


இதேவேளை, மல்வத்த மகாநாயக்க பீடத்தின் பீடாதிபதி பிட்டக்கொட்டுவே சிறீசுமங்கள தேரரையும் புதிய படைத்தளபதி சாந்த ஹொட்டேகொட சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

இதன் போது, நாட்டு மக்கள் அனைவரையும் பாதுகாக்கும் வகையில் புதிய படைத்தளபதி செயற்பட வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து கருத்துக் கூறிய புதிய படைத்தளபதி சாந்த ஹொட்டேகொட, படையினர் தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளுக்கான தமது பங்களிப்பை வழங்குவார்கள் எனத் தெரிவித்தார். கருணாவுக்கும், படையினருக்கும் தொடர்புகள் இருப்பதாக வெளியான தகவல்களை மறுத்துரைத்த சாந்த ஹொட்டேகொட, யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு படையினர் தயாராக இருப்பதாகவும், இதன் போது எந்தக் குழுக்களின் உதவியையும் படையினர் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

(உ)



வாசலில் ஒளிவீசு வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இவ் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களை முதற்படத்திலும் முதற் பிரதியை யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் மோகனதாஸிடம் இருந்து வல்லிபுரம் இராசையா பெற்றுக்கொள்வதை அடுத்த படத்திலும் காணலாம். படம்:அலுவலகச் செய்தியாளர்.

## புலிகளின் தடையை நீக்க வேண்டும் என்ற

# கூட்டமைப்பின் கோரிக்கையை எதிர்க்கக் கோருகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையை நீக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தினால், அதற்கு அரசாங்கம் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டுமென ஜாதிகஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ளனர்.

இவ்வார இறுதிக்குள் அமெரிக்காவின் தென்கிழக்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா ரொக்காவைச் சந்திக்கவுள்ள இவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு அவரிடம் வலியுறுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இத்தகைய வேண்டுகோள் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவிடம் விடுப்பார்களாக இருந்தால், அது தொடர்பாக ஜாதிகஹெல உறுமய தனது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தும் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் அத்துரெலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (உ)



# கொள்ளுப்பிட்டிச் சம்பவத்தினால் சமாதானத்திற்குப் பாதிப்பில்லை

## ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்ளுபிட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் சமாதான நடவடிக்கைகள் ஒரு போதும் பாதிக்கப்படமாட்டாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் நேற்று முன்

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பார்கள் என்ற பூரண நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 'சமாதானத்தை ஏற்படுத்துவது' என்பது மிக முக்கியமானதாக இருப்பதால்

இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைப் பயன்படுத்தி எவரும் அரசியல் இலாபம் தேடமுனையக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்தினசிறி விக்கிரம நாயக்கா கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கருத்துக் தெரிவிக்கையில்,



வாசலில் ஒளிவீசு வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இவ் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களை முதற்படத்திலும் முதற் பிரதியை யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் மோகனதாஸிடம் இருந்து வல்லிபுரம் இராசையா பெற்றுக்கொள்வதை அடுத்த படத்திலும் காணலாம். படம்:அலுவலகச் செய்தியாளர்.

# எதிர்க்கக் கோருகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையை நீக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தினால், அதற்கு அரசாங்கம் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டுமென ஜாதிகஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ளனர்.

இவ்வார இறுதிக்குள் அமெரிக்காவின் தென்கிழக்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா ரொக்காவைச் சந்திக்கவுள்ள இவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு அவரிடம் வலியுறுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இத்தகைய வேண்டுகோள் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவிடம் விடுப்பார்களாக இருந்தால், அது தொடர்பாக ஜாதிகஹெல உறுமய தனது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தும் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் அத்துரெலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (உ)

# கொள்ளுப்பிட்டிச் சம்பவத்தினால் சமாதானத்திற்குப் பாதிப்பில்லை

## ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்ளுபிட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் சமாதான நடவடிக்கைகள் ஒரு போதும் பாதிக்கப்படமாட்டாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்கவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவம் இடையூறாக இருக்க மாட்டாது. அவ்வாறு இடையூறாக இருக்கவும் விடக்கூடாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பார்கள் என்ற பூரண நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 'சமாதானத்தை ஏற்படுத்துவது' என்பது மிக முக்கியமானதாக இருப்பதால் எத்தகைய இடையூறுகள் வந்தாலும் சமாதான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் என்று தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார்.

அறிக்கையின் விபரம் வருமாறு:

பொது மக்களின் பாதுகாப்பைத் தொடர்ந்தும் உறுதி செய்வதற்கு அரசு திடசங்கற்பம் பூண்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் கொள்ளுப்பிடிட்டிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைப் பயன்படுத்தி எவரும் அரசியல் இலாபம் தேடமுனையக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்தினசிறி விக்கிரம நாயக்கா கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

எத்தகைய இடையூறுகள் வந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லும்.

எனவே அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு சகல மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தினைக் காரணங்காட்டி சமாதான நடவடிக்கைகளை அரசு இடைநிறுத்தக்கூடாது.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றிவருவதாக கூறும் அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விடயத்துக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடைமுறையில் இருதரப்பினரும் காட்டும் அர்ப்பணிப்பு, நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு போன்ற துரதிஸ்டவசமான சம்பவங்களைத் தடுக்க வழிவகுக்கும் என்றார். (உ-60,10)

# தனித்தரப்பை வலியுறுத்தி நாடு முழுவதும் போராட்டம்

## எச்சரிக்கிறது மு.கா.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையினை வலியுறுத்தி இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களையும் சந்திக்கப் போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் முஸ்லிம் தனித்தரப்புக் கோரிக்கை தொடர்பாக சரியான முடிவுகளை எடுக்கத் தவறிவிட்டதாக் குற்றஞ்சாட்டியுள்ள முஸ்லிம் காங்கிரஸ், இதன் காரணமாகவே வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு இது குறித்து விளக்கமளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பின் பின்னரும் முஸ்லிம் தனித்தரப்புக் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ள அரசாங்கமோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ மறுப்புத் தெரிவித்தால் இலங்கை முழுவதும் போராட்டம் நடத்துவதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது. (உ)





யாழ்.மாவட்டத்தின் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகளின் அபிவிருத்திபற்றி ஆராய்வதற்காக நேற்று முன்தினம் வருகைதந்த ஜப்பான் தூதரக முதன்மைச் செயலாளர் கோசி இவாசிடா தலைமையிலான குழு ஒன்று நேற்று காலை 9.00மணிக்கு யாழ்.செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிகாரிகளை சந்தித்து பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். / படம்: அலுவலக செய்தியாளர்

# காணாமல் போன வேட்பாளர் கடத்தல்காரரிடமிருந்து மீண்டார்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாத்தறை மாவட்ட மாகாண சபை வேட்பாளர் கடத்தல்காரர்களிடமிருந்து தப்பிவந்துள்ளார்.

ஜீப் வண்டியில் கடந்த திங்கட்கிழமை தான் சென்று கொண்டிருந்த வேளை, பொலிஸ் சீருடையில் ஆயுதம் தரித்த இருவரால் வழிமறிக்கப்பட்டு, பாழடைந்த வீடு ஒன்றில்தான் அடைத்து வைக்கப்பட்டதாக களுத்துறை சிறிலங்காப் பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

தன்னைக் கடத்தியவர்கள் கடந்த செவ்வாயன்று தன்னைக் கொழும்பு நோக்கி அழைத்துச் சென்றதாகவும், கொழும்பு செல்லும் வழியில் தொலைபேசிக் கூண்டு ஒன்றில் கடத்தல்காரர்கள் இறங்கிய சமயம் பார்த்து தான் முச்சக்கரவண்டியொன்றின் உதவியுடன் வீடு நோக்கி தப்பிச் சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்மாகாண சபை வேட்பாளர் களுத்துறை காவல் துறைப் பணிமனையில் விவாகரத்து வழக்கினை தாக்கல் செய்துள்ளமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். (உ)

## வெள்ளி நற்சிந்தனை

# நாமம் பலகொண்டு நானிலம்

# காக்கும் நாயகனின் சிறப்பு!

எல்லாம் வல்ல இறைவனுக்கு பதி, கடவுள், தெய்வம், பகவான், ஆண்டவன், இறைவன் என்றெல்லாம் பல பெயர்கள் உண்டு. எல்லாமே ஒரு பொருளையே உணர்த்



துபவை.

பதி என்பதற்குத் தலைவன் என்பது பொருள். பசுக்களுக்கு (உயிர்களுக்கு) தலைவனாதல் பற்றி, 'பதி' எனப்படுகிறான் இறைவன்.

'கடவுதல்' எனில் செலுத்துதல் எனப் பொருள்தரும். உலகத்தைச் செலுத்துபவன் ஆதலின், 'கடவுள்' எனப்படுகிறான். 'கட' என்றால் நடத்துதல் என்றும் பொருள் உண்டு. நம் உள்ளேயிருந்து நம் வாழ்க்கையை நடத்திச் செல்ல வழி காட்டுகின்றவன் (கட+உள்) கடவுள்.

'இறு' என்பதற்குத் தாங்குதல் என்பது பொருள். உலகத்தைத் தாங்குபவன் இறைவன் எனப்பட்டான். ஆறு குணங்களை உடையவன் என்பதால் பகவான் எனப் பட்டான்.

உலகை ஆள்கின்ற காரணம் பற்றி ஆண்டவன் என்னும் பெயர் எழுந்தது. பதி, கடவுள், இறைவன், பகவான், ஆண்டவன் என்பவை பொதுப் பெயர்கள். சிவன், திருமால், பிரம்மன், முருகன், வருணன், அக்னி முதலியன சிறப்புப் பெயர்கள்.

ஒரு நாமம் ஓர் உருவம் என்று எதுவுமே இறைவுக்கு இல்லை. அவனுக்குள்ள பொதுப் பெயர்களோ சிறப்புப் பெயர்களோ மக்களால் அன்புடன் இட்டு வழங்கப்படுபவை.

**ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று**
**மில்லார்க்கு ஆயிரம் திருநாமம்**
**பாடிநாம் தெள்ளேணம் கொட்**
**டாமோ!**

என திருவாசகம் கூறிகிறது. எனவே, இறைவன் ஒருவனே என்பதும், பல பெயர்களை இட்டு நாமே சிறப்புடன் அழைக்கிறோம் எனபதும், தெளிவாக அறியக்கிடக்கிறது.

நாமம் பல கொண்டு நானிலத்தைப் படைத்துக் காக்கும் நாயகனின் சிறப்பியல்புகளைச் சிறிது நோக்குவோம். பதியாவது தானே அறிகின்ற பொருள். உலகனைத்தையும் தாங்கும் சிறப்பு இறைவனுக்குண்டு. மனம், மொழி, மெய்களைக் கடந்துள்ள பொருள் அவன். எண் வகைப் பெருங்குணங்களையும் தன்னகத்தே கொண்டவன் அவன். ஆறுவகைக் குணங்களை உடையோன் எனவும் கூறுவர். ஐஸ்வர்யம், வீரியம், புகழ், தேஜஸ், ஞானம், வைராக்கியம் எனப்படும் ஆறு குணங்களைப் பெற்றவன் பகவான் என்பர். அவனே இவ் உலகின் முதல்வர் என்பர்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்கே உலகு**

என்பது கடவுள் வாழ்த்துத் திருக்குறள். தன் வயத்தனாதல், தூயஉடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில் கட்டுப்படாத தன்மை, பேரருள் உடைமை, முடிவில்லா ஆற்றல் உடைமை, வரம்பில் இன்ப முடைமை ஆகிய யாவும் இறைவன் இயல்புகள்.

**கோள்இல் பொறியிற் குணம்**
**இலவே எண் குணத்தான்**
**தாளை வணங்காத் தலை**

என்ற குறளில் திருவள்ளுவர் இறைவனை 'எண்குணத்தான்' எனக் குறிப்பிடுதலைப் போலவே, சைவ சமயப் பெரியோர்களும் குறிப்பிடுகின்றனர்.

**எட்டுவான் குணத் தீசன் எம்மான்**
எனத் திருநாவுக்கரசரும்,
**இரும்புயர்ந்த மூவிலைய**
**சூலத்தினானை**
**இறையவனை மறையவனை**
**எண்குணத்தினானை**

என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடிப் புகழ்ந்துள்ளனர்.

எண் குணத்தான் என்பதற்கு எண் வகைச் சித்திகளை உடையவன் எனவும் பொருள் கூறுவர் ஒரு சாரார்.எண் வகைச்சித்திகளாவன.

அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசிதை, வசிதை எனப்படுபவை.

எண்குணங்கள் என்பன கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆளிம்மை, அழியா இயல்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

தீ வடிவினன் என்பதால் இறைவனைத் தெய்வம் எனவும் நாம் குறிப்பிடுவோம். **சோதியே சுடரே சூழொளி விளக்கே** என்றார் மாணிக்கவாசகர்.

திருவள்ளுவர் பாடிய கடவுள் வாழ்த்தில் இறைவனின் இனிய குணங்களைப் போற்றி அவன் திருவடிகளை வணங்கி அவனை நினைத்து வாழ்த்தி அருள் நெறியில் நிற்பார். வீடு பேற்றடைவார் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**பிறவிப் பொருங்கடல்**
**நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேராதார்**

என்பது குறள்.

இறைவனடி சேர்வதற்கும், இறையுணர்வு பெறுவதற்கும் ஆன்றோர்கள் காட்டியுள்ளவழி, நல்லொழுக்கமும், நேர்மையும், தூயபக்தியுமே ஆகும்.

'எவரிடத்தும் துவேஷம் காட்டாமல்,எல்லோரையும் அன்புடன்

**மாருதிதாசன்**

நேசித்து, கருணை காட்டி,பரோபகார சிந்தையுடன் வாழ்ந்து,'தான்' என்ற அகம்பாவம் இல்லாமல் சுகதுக் கங்களை சமமாகப் பாவித்து, மன்னிக்கும் மனப்பான்மையும், தன்னடக்கமும் கொண்டு வாழும்,எந்த மனிதனும் இறைவனை நேரில் காணமுடியும். அவனருளுக்குப் பாத்திரமாக முடியும்' என்று கீதையில் பக வான் ஸ்ரீகிருஷ்ணன் கூறியுள்ளார்.



# சமுர்த்தி முகாமையாளர்களின் சம்பள ஏற்றத்தாழ்வுக்கு முடிபு

## சிறுவிளம்பரம்

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை

மண்டேலா புத்தகசாலை, யாழ். நகரில் விற்பனையாகின்றது. உளச்சார்பு, பொதுஅறிவு மொழித் திறன் அடங்கிய "தகவல் தடாகம்" மற்றும் 'பொது அறிவுத் தேடல்' ஆங்கிலத்தில் 50 கட்டுரைகள், அழகியல் தரம் 1-5 வரை, 20.8.2004ல் நிகழும் வியாழமாற்றப் பலா பலன்கள், ஆனந்தி திருமண சேவை மூலம் மணமக்களைத் தேடித்தர V.A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். சோதிட ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இல -01 பழம் றோட் ,கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.

(8635)

### பரு. சென் தோமஸ் ச.ச.நிலையம் அபிவிருத்தி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சென்தோமஸ் சனசமூக நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை செயற்குழு துரிதமாக மேற்கொண்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டதிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபா நிதியினால் சனசமூக நிலையத்திறகு மின் இணைபபை ஏற்படுத்தியுள்ளதுடன் , நூலகத்திற்கான அலுமாரிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், நூலகத்திற்கு சுமார் 25 ஆயிரம் ரூபா செலவில் புதிய நூல்கள் கொள்வனவு செய்யவுள்ளன.

இதுதவிர, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலைக்கு வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா நிதியின் மூலம பாலர் பாடசாலைக்குத் தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், சனசமூக நிலையப் பிரதேசத்தில் க.பொ.த. (சா/தா) தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக கௌரவித்து பாராட்டும் விழாவும் அடுத்தமாதம் நடைபெறு மென நிலையச் செயலாளர் தெரிவித்தார்.

(உ-52)

### எனக்கு மரணம் இல்லை

அகில இலங்கை இளங்கோ கழக மூத்த உறுப்பினர் பெரிய ஐங்கரனின் 'எனக்கு மரணம் இல்லை' கவிதை நூல்வெளியீடு நாளை சனிக்கிழமை தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் பண்டிதர் வீ.பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக கலாநிதி எஸ். திருநாவுக்



புலோலி மெதடிஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியொருவருக்கு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சு.கமலநாதன் பரிசில் வழங்குகிறார்.

படம்:சு.கணபதிப்பிள்ளை



ஆழியவளை திலீபன் மருத்துவமனைக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் மருந்துப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. திலீபன் மருத்துவ மனைப்பொறுப்பாளர் ஈழவாணியிடம் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத் தலைவர் வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் மருந்துப் பொருட்களைக் கையளிக்கிறார்.

(படம்: பரு.நிருபர்)

# சம்பள ஏற்றத்தாழ்வுக்கு முடிவு

(கொழும்பு)

சமுர்த்தி முகாமையாளர்கள் மத்தியில் நிலவிவரும் சம்பள ஏற்றத்தாழ்வுகள் விரைவில் நீக்கப்படும் என சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி முகாமையாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோதே இதனைத் தெரிவித்திருந்தார்.

அடுத்த இருவார காலப் பகுதியல் சமுர்த்தி முகாமையாளர்கள் மத்தியில் நிலவிவரும் சமபள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது குறித்த அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துளளார். (உ-60,10)

# வவு.கல்வி நிலைமை வெகுவாகப் பாதிப்பு

(வவுனியா)

சகல வளங்களும் இருக்கின்ற போதிலும் வவுனியா மாவட்டத்தினது கல்வி நிலைமை பெரிதும் வீழ்ச்சியடைந்து வருவதாக வவுனியா தெறகு வலயக் கல்விப் பணிப்பாளர் றியாறே ஒஸ்வேர் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபர்கள் கல்விக் கழகத்தினர்,கல்விமேம்பாட்டுப் பேரவையினர் ஆகியோருடனான சந்திபபில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத தெரிவித்தார்.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் இருந்து க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்கு தோற்றிய ஆயிரத்து952 மாணவர்களில் 803மாணவர்களே சித்தியடைந்துள்ளனர்.

இதனால், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோர் தொகை குறைவடைந்திருப்பதாகவும் கடந்த உயர்தரப் பரீட்சையில் 35 சத வீத மானோரே சித்தியடைந்திருப்பதாகவும் அவர்மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

(உ-4,61)

நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக கலாநிதி எஸ். திருநாவுக்கரசும சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார், புறறளை மகா வித்தியாலய அதிபர் திருமதி எஸ். இந்திரராஜா, வித்தியாலய பழையமாணவர் சங்கத் தலைவர் எஸ். கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை புற்றளை சித்தி விநாயகராலய பிரதம குரு சிவஸ்ரீ எஸ்.ஜெயபாலசுந்தரக்குருக்களும் வாழ்த்துரையை யாழ்.புதிய உயர் கல்லூரி இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி எஸ். அருள் நங்கையும் நிகழ்ந்தவுள்ளனர்.

நூல் அறிமுகவுரையை புலோலியூர் செல்வமும் வெளியீட்டுரையை எம்.பகீரதனும், ஆய்வுரையை கவிஞர் கல்வயல் வே.குமாரசாமியும், சிறப்புரையை புற்றளை மகாவித்தியாலய ஆசிரியர் ரீ.ஜெயவீரசிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (உ-52)

# இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை கிரான் பகுதியில் கைக்குண்டுடன் நடமாடிய இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட பிரஸ்தாப இளைஞர் நேற்று வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (த)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல: 8

சுவாமிகளுக்கு இரண்டு பெண் மகவுகளுக்குப் பின் ஒரு ஆண் குழந்தை பிறந்தது.அவர் என் தந்தையாருக்கு எழுதிய கடிதத்தில் ''கிருபானந்தவாரிக்குத் தம்பி பிறந்திருக்கிறான்''என்று குறிப்பிட்டிருந்தார். ஒருமுறை என் பிதாவுக்கு எழுதிய கடிதத்தில் உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள நிலபுலன்களை நீங்கள் வாங்குவீர்கள். வீடு முழுவதும் நெல் குவிந்திருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.



நீண்ட நாளைக்குப் பின் அவர் வாக்குப் பலித்தது. காங்கேயநல்லூரில் எங்கள் வீட்டிற்கருகிலுள்ள நிலங்களையெல்லாம் வாங்கும் வாய்ப்பைத் திருவருள் கூட்டிவைத்தது.

சுவாமிகள் 1936ல் மறைந்துவிட்டார். அவர் மறையும் பொழுது மனைவியாரிடம் கிருபானந்தவாரி இருக்கின்றான். அவன் காப்பாற்றுவான். கவலைப்படாதே என்று கூறினாராம். அதற்குப் பின் அம்மையாருக்கு மாதந்தோறும் செலவிற்கு 50,100 என்று அடியேன் அனுபபிக் கொண்டிருந்தேன். அவருடைய இரண்டு பெண் மக்களைத் திருமணம் செய்து கொடுத்தேன். அவருடைய புதல்வர் கணபதியைப் படிக்க வைத்து வங்கியில் வேலை வாங்கிக் கொடுத்தேன். 25 ஆண்டுகள் அந்தக் குடும்ப நிர்வாகத்தைச் செய்ய நேர்ந்தது.

அவருடைய மூத்த மாப்பிள்ளை கே.வி. தியாகராஜ ஐயர் அவர்கள் திருப்புகழ் விரிவுரை எங்கும் சென்று செய்வதுடன் சுவாமிகள் நிறுவிய திருப்புகழ் சபையைப் பக்தி சிரத்தையுடன் பரிபாலனம் செய்து வருகின்றார்.

## கதிர்காம யாத்திரை

1933ல்காங்கேய நல்லூரில் மகா கும்பாபிஷேகம் எனது தந்தையாரும், நானும் செய்து வைத்தோம். ஆடி மாதத்தில் கதிர்காமத்தில் நிகழும் ஆடிவேல் விழாவைத் தரிசிக்கும் பொருட்டு சென்னையிலிருந்து புறப்பட்டோம். அப்பொழுது எனக்கு வயது 27. என்னுடைய தந்தையார், தாயாரும், தமையனார், என் மனைவி, என் பெரிய தாயார் மகள் ராஜம்மா என் மைத்துனர் த.மு. ரங்கசாமி முதலியார், காங்கேய நல்லூர் திருப்புகழ்ச் சபை அன்பர் அண்ணாமலை முதலியார், சென்னையில் வடிவேல் செட்டியார் முதலிய அன்பர்கள் ஆக 30 பேர் சென்னையிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்டோம். மண்டபத்தில் ஒருநாள் தங்கி அங்கு ஒரு விரிவுரை செய்தேன். அதனால அங்குள்ள அதிகாரிகள் எங்களுக்குத் தொல்லை தராமல் பிரயாணத்திற்கு உதவி செய்தார்கள்.

தனுஷ்கோடியில் கப்பல் ஏறித் தலைமன்னாரில் இறங்கிப் புகைவண்டியில் ஏறி, கொழும்பு மாநகரம் சேர்ந்தோம். அங்கு ஒரு சத்திரத்தில தங்கினோம். கொழும்பிலிருந்து பேருந்து வண்டியில் ஏறி 'திசைமாறா' என்ற இடத்தை அடைந்தோம். அப்பொழுது மாலை 6 மணி. கற்பூர ஆராதனை செய்துவிட்டுக் கரடு முரடான குழி பள்ளத்துடன் கூடிய வழியில் அரோஹரா அரோஹரா என்று ஓலமிட்டுக் கொண்டு நடந்தோம். யானைக்காடு ஆதலினால் யானைகள் வரும் என்ற அச்சத்தினால் அரஹர என்ற முழக்கம் செய்து கொண்டே சென்றோம். இன்னும் பல்லாயிரம் மக்கள் நடந்து சென்றார்கள்.

கதிர்காமக் கோயிலுக்கருகில் பளிங்கு போலத் தெளிவாக ஓடும் மாணிக்க கங்கா நதியில் முழுகினோம். அந்த ஆற்றில் மீன்கள் குழந்தை போல் விளையாடிக் கொண்டிருந்தன. அன்று இரவு ஆயிரக்கணக்கான கற்பூர தீபங்களை ஏற்றிக் கொண்டு மக்கள் கண்ணீரால் நனைந்து வழிபாடு செய்யும் காட்சி கண்கொள்ளாதது. அங்கே இரண்டு நாள் தங்கியிருந்தோம். முருகன் பெருமையைப் பற்றி விரிவுரை செய்தேன். அங்கிருந்து புறப்பட்டுக் கொழும்பு வந்து தாய்நாட்டை அடைந்தோம். பகுதி பேர் எங்களைவிட்டுப் பிரிந்து விட்டார்கள்.

ராமேசுவரம் தரிசித்துக்கொண்டு மதுரை வந்து சேர்ந்தோம்.மதுரையில் தினகர விலாஸ் என்ற ஹோட்டலில் ஆள் ஒன்றுக்கு சாப்பாட்டிற்கு 1½ அணா தான் கட்டணம். வடை,பாயாசம், அப்பளத்துடன் கல்யாண விருந்து போல் உணவு படைப்பார்கள். 1½ அணாவிற்குச் சாப்பாடு என்பது இக்காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. நாங்கள் அந்த ஹோட்டலில் திருப்தியாக நபர் 1க்கு 1½ அணாகொடுத்துச சாப்பிட்டோம். மறுநாள் 1½ அணாகொடுத்துச் சாப்பிடுவதா? என்று யோசித்துக் கோயிலில் அரை அணாவிற்குப் பெரிய அளவில் கிடைக்கும் பிரசாதங்களை வாங்கிச் சாப்பிட்டோம். அங்கிருந்து திருச்செந்தூருக்குச் சென்றோம். இன்னும் பகுதி பேர் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார்கள்.

ஆவணிப் பெருவிழாவைச் சேவிக்குச் பொருட்டு திருச்செந்தூருக்குச் சென்றோம். அங்கு மதுரை திருப்புகழ்ச் சுவாமிகள் சுவாமிக்குப்பின் திருப்புகழ் கோஷ்டி செய்ய எழுந்தருளியிருந்தார். நாங்கள் திருச்செந்தூரில் 12 நாட்கள் தங்கிச் சுவாமிகளுடன் கோஷ்டி செய்து 7-ம் திருவிழாவில் 8-ம் திருவிழாவில் ஷண்முகநாதருடைய மாட்சி மிகுந்த காட்சியைக் கண்டு களித்தோம். திருச்செந்தூருக்கு அருகில் உள்ள குலசேகரப்பட்டணம் போய் அங்குள்ள அன்பர்களின் வேண்டுகோளுக்கினங்கி நானும் சுவாமிகளும் விரிவுரை புரிந்தோம். திருச்செந்தூரை விட்டுப் புறப்படும் பொழுது நாங்கள் அறுவர் மட்டும் எஞ்சி நின்றோம்.

நாங்கள் அறுவரும் நெல்லை,கன்னியாகுமாரி, பாபநாசம், சங்கரன்கோயில், ஸ்ரீவில்லிப்புத்தூர், பழநி முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருச்சிராப்பள்ளி அடைந்தோம்.

## வயலூர்

அருணகிரிநாதருக்குத் திருப்புகழ் பாடும் அருள் திறத்தை வழங்கிய திருத்தலம் வயலூர்.

''*பாத பங்கய முற்றிட உட்கொண்*
*டோதுகின்ற திருப்புகழ் நித்தம்*
*பாடுமன்பது செய்ப்பதி யிற்றந் தவனீயே*''
- திருப்புகழ்

அருணகிரியாருக்கு வயலூரில் தணியாத காதல் உண்டு. எங்கு சென்றாலும் வயலூரை மறவாமல் "வயலூரா! வயலூரா!'' என்று பாடுவார். அருணகிரிநாதரிடத்தில் ஆராத அன்புடைய எங்களுக்கு ஆர்வம் விளைவது இயல்புதானே?

நாங்கள் வயலூர் சென்றோம். வயலூர் எம்பெருமானுக்கு வெள்ளி அங்கி சாத்தி அலங்காரம் செய்திருந்தார்கள் சின்னஞ் சிறுவரான ஜம்புநாத குருக்கள் ராகமாளிகையாக முருகனுக்கு இனிமையாக அர்ச்சனை செய்தார்கள். அங்குள்ள கரும்பலகையில் வெள்ளிக் கவசம் சாத்த கட்டணம் 8 அணா என்றிருந்தது. குருக்களின் கற்பூரத் தட்டில் நான் 8அணா காணிக்கையாக இட்டேன். சந்நிதியில் அமர்ந்து பக்திபரவசத்துடன் ஆறு படைவீட்டுத் திருப்புகழ்களைப் பாராயணம் செய்தோம்.

பின்னர் திருவானைக்கா,ஸ்ரீரங்கம், சமயபுரம், தஞ்சை, சுவாமிமலை, கும்பகோணம், திருவிடை மருதூர், மாயூரம், வைத்தீச்வரன் கோயில், திருப்புன்கூர், சீர்காழி, சிதம்பரம், திருப்பாதிரிப்புலியூர், முதலிய ஸ்தலங்களைத் தரிவித்துக் கொண்டே சென்னை சேர்ந்தோம்.

(தொடரும்)

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி II தொடர்ச்சி**

(ஆ) "ஆயிடைக் கருணை வேந்தாணை மீறிய
தீயரைத் தீச் சிறைப்படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுருதி நூ வியம்பு கின்றதை
ஆயவித் துயர்க் கடலமிழ்த்தி னேனரோ''

(இ) "சொற்ற வார்த்தையைக் கேட்டாலும் தொல்லுயிர்
முற்றும் உண்பது போலும் முனிவினான்
பற்றுமின் கடிநின் நெடும் பார்மிசை
ஏற்றுமின் என நூல்வரை ஏவினான்

(ஈ) நின்றுணை நாயன்றன் பானெருங்கியே யாருமெய்ப்ப
வெற்றியே கொண்ட யானென் வீரமே காண வேண்டிற்
றுன்றுநின் சேனை யோடும் வருகெனத் துணைக்கண் பேப்ப
வன்றிறவரசன் சொற்றான் வள்ளது மகிழ்ந்து போந்தார்

(உ) "அற்புக்(கு) ஆழிஅனான் அரிச்சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும்
பொறுப்புப்போம், பொறைபோம், நிறைபோம் என்பதன்
கற்புப் போவ(து) ஏன்? என்று கலங்கினாள்''

(20 புள்ளிகள்)

3.இருட்டறை என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ) இருட்டறை என்ற தலைப்பின் பொருத்தப்பாடு
(ஆ) கிழவி சகீனாவின் பிள்ளைப்பாசம்
(இ) கிழவி சகீனாவின் அறுபது வருட வாழ்க்கையும் வெட்ட வெளிச்சமாகிய நிகழ்வு.

(15புள்ளிகள்)

4. நீதிப் பாடல்கள் என்ற பாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு எவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) "பசி வந்துவிட்டால் பறந்து போய்விடும்'' பத்தில் ஐந்தினை எழுதுக.
(ஆ) தீயார் தொடர்பின் தீங்கு காட்டப்படும் விதம்.
(இ) ''நல்லாரால் எல்லார்க்கும் நலம் பெருகும்'' என்பதைக் காட்டும் விதம்.

**5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.**

5. இளையான் குடிமாற நாயனார் புராணம் என்ற பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றில் இரண்டை விளக்குக.
(அ) நடராசப் பெருமான், மாற நாயனாரின் திருமாளிகைக்கு எவ்வேளையில், எவ்வாறு எக்கோலத்துடன் சென்றார் எனக் காட்டப்பட்டுள்ளது?
(ஆ) மாறநாயனாரின் பெருஞ் செல்வத்தைக் குறைவடையச் செய்ய நடராசப் பெருமான், மாற நாயனாரின் திருமாளிகைக்கு எவ்வேளையில் எவ்வாறு எக்கோலத்துடன் சென்றார் எனக் காட்டப்பட்டுள்ளது.
(இ) மாறனார் வயலுக்குச் சென்ற காட்சியைச் சேக்கிழார் காட்டும் விதம்.

(10 புள்ளிகள்)

6. "நமுறூது அழிவுண்ட படலம்'' என்ற பாடல் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றில் இரண்டை விளக்குக.
(அ) இப்றாஹீம் நபி அவர்கள் இறைவனின் தகுதியையும், வல்லமையையும் நமுறூதுக்குக் கூறும் விதம்.
(ஆ) போருக்கு எழுந்த நமுறூதீன் படைகளின் வருகை.
(இ) நமுறூது போருக்கு முரசறைதல் வீரர்களின் தோற்றம் அவர்களின் செயல்கள்.

(10 புள்ளிகள்)

7. அரிச்சந்திர புராணம் என்ற பாடப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றில் இரண்டை விளக்குக.
(அ) சந்திரமதியின் துயரத்தில் அரற்றிய வார்த்தைகளிடையே அரிச்சந்திரனின் சிறப்பைக் கூறுதல்.
(ஆ) லோகிதாசன் இறந்தபோது சந்திரமதி அடைந்த துன்பம் சித்தரிக்கப்படுதல்.
(இ) மகனுடலைத் தகனம் செய்யச் சென்ற சந்திரமதிக்குப் புலையன் கூறும் வார்த்தைகள்.

(10 புள்ளிகள்)

**நாளை சமூகக்கல்வியும் வரலாறுக்குமான பகுதி -I வினாக்கள் வெளிவரும்.**

## சுற்றறிக்கையின் பிரகாரமே இனி முதலாம் ஆண்டுக்கு மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது கல்வி அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் பின்பற்றிச் செயற்படுமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களைப் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளும் போது சுற்றறிக்கைகளைக் கவனியாது விடுவதால் ஏற்படும் நிர்வாகச் சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக வேண்டியே இந்நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களையும் அறிவுறுத்தியுள்ளது. (உ-4,61,64)

**அன்பு வாசகர்களே!**

**ஏ-9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு விடிவைத் தருமா அல்லது அழிவைத் தருமா என்ற தலைப்பிலான விவாத அரங்கிற்கான தீர்ப்பை எதிர்வரும் 12.07.2004 (திங்கட்கிழமை) அன்று ஈழத்தின் பிரபல எழுத்தாளர் பொன்.கணேசமூர்த்தி (முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை) முன்வைப்பார்.**

**க.பொ.த. (சா.த)**
**மாணவர்களே! வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள் வெளிவருகின்றன.**

# உண்மையை உடைத்த லாலு மீது ஜெயலலிதா பாய்ச்சல்

## ரயில்வே பட்ஜட் பற்றி கருணாநிதி

(சென்னை)

லாலுபிரசாத் மீதுள்ள ஆத்திரத்தில் முதல்வர் ஜெயலலிதா ரயில்வே பட்ஜெட்டை குறை சொல்கிறார் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது பற்றி கடந்த புதன் கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில், லாலு பிரசாத்தின் பட்ஜட், அனைத்துப் பிரிவினராலும் புகழப்படுகின்றது. ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்குச் சலுகைகள் கொண்ட பேழையாக இந்த பட்ஜட் விளங்குகிறது.

புதிய ரயில்கள் அறிமுகம், அகலப் பாதை மாற்றம், எளிய மக்களுக்கும் ஏற்ற வகையில் தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள் இணைப்பு, வேலைவாய்ப்பில் தலித், பிற்படுத்தப்பட்டோருக்கான காலியிடங்கள் நிரப்ப சிறப்பு நடவடிக்கை என பல்வேறு இனிய செய்திகளைத் தாங்கியுள்ள ரயில்வே பட்ஜட், தமிழ் மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுள்ளது. பத்திரிகைகளும் லாலுவைப் பாராட்டியுள்ளன.

ஆனால், தமிழக முதல்வர் ஜெயலலிதா மட்டும், தொலைதூரப் பார்வை கொண்டதாக பட்ஜட் அமையவில்லை என்று கூறி இருக்கிறார். தன்னைப் பற்றி அண்மையில் லாலு கூறிய ஒரு விமர்சனத்துக்குப் பதிலடியாகத்தான் ரயில்வே பட்ஜட்டை ஜெயலலிதா விமர்சித்திருக்கிறார்.


குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர்களை எதிர்த்து நாடாளுமன்றத்தில் கூச்சலும் குழப்பமும் விளைவித்த பா.ஜ.க.வினரைப் பார்த்து ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான ஜெயலலிதாவுடன் கூட்டு வைக்கிறீர்கள் எங்களை மட்டும் உங்களுக்குக் கசக்கிறதா? என்று லாலு கேட்டு விட்டார். ஆதாரபூர்வமானதும், ஆவேசம் கலந்ததுமான ஒரு ஒப்பீட்டுக் குற்றச்சாட்டை அவர் ஓங்கி ஒலித்தார்.

அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் மொத்த ரயில்வே பட்ஜட்டையே தொலைநோக்கு இல்லாதது என்று பொத்தாம் பொதுவாக ஜெயலலிதா குற்றஞ்சாட்டிவிட்டார்.

மாநிலத்தில் மேலும் நிறைவேற வேண்டிய திட்டங்களைச் சுட்டிக் காட்டி அவற்றை நிறைவேற்றக் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளை அறவே புறக்கணித்து விட்டு, எடுத்த எடுப்பிலேயே ஏமாற்றம் அளிக்கின்ற பட்ஜட் என்று ஜெயலலிதா விமர்சித்திருக்கிறார். ஆரோக்கியமற்ற பட்ஜட் என்று அவர் ஆத்திரப்பட்டிருக்கிறார்.

அவரைப் போலவே, கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வும், முன்னேற்றத்துக்கு எதிரான பட்ஜட் என்று வர்ணித்திருக்கிறது.

சுமைதூக்கும் போர்ட்டருக்கு வசதிகளைப் பெருக்குவது, கைத்தறியாளர்கள், கதர் உற்பத்தியாளர்கள், ஊனமுற்றோர், இராணுவ விதவைகள், பெண் டிக்கெட் பரிசோதகர் நியமனம், வேலைவாய்ப்பில் தலித், பிற்பட்டோர், சிறுபான்மையினருக்குச் சலுகை என சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கினால், அது பா.ஜ.க. அகராதியில் முன்னேற்றமில்லாத ஒன்று தானே! (து)




## 1513 கோடி ரூபா வரியில்லா பட்ஜட் புதுவை முதலமைச்சர் சமர்ப்பித்தார்

(புதுவை)

புதுவை முதலமைச்சர் ரங்கசாமி 1513 கோடி ரூபா வரியில்லா பட்ஜட்டை நேற்று முன்தினம் புதுவை மாநில் சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார்.

விவசாயிகளின் துயர் துடைக்க விவசாயிகளின் நிவாரணத் திட்டத்துக்கு 3 கோடி ரூபா நிரந்தர நிதி ஒதுக்கப்படும் என்றும் கூட்டுறவு வங்கி மற்றும் விவசாயிகள் ஆரம்பக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களில் கடன் வாங்கிய நலிவடைந்தோருக்கு சுமார் 1 கோடியே 20 இலட்சம் ரூபா கடன், மற்றும் வட்டி தள்ளுபடி வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் 2200இல் இருந்து 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பு, பெண்கள் பெயரில் வாங்கும் சொத்துக்களுக்கு 50 சதவீத முத்திரைத்தாள் கட்டணச் சலுகை, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கு முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு என்பனவும் புதுவை பட்ஜட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# வரி ஏய்ப்புச் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை

## பொருளாதார ஆய்வறிக்கை வற்புறுத்தல்

(சென்னை)

வரி ஏய்ப்புச் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கையெ டுக்க வகை செய்யும் புதிய முறையை ஏற்கவேண்டுமென நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சென்ற நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் சமர்ப்பித்த இந்த ஆய்வறிக்கையில் மாநில அரசுகளின் நிதி நிலைமை மோசமடைந்திருப்பது பற்றிக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் உள்ளிட்ட பொதுச் சேவைகளையும் வசதிகளையும் பயன்படுத்துவோரிடம் கட்டணம் வசூலிப்பது அவசியமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி விகிதம் குறைந்து 10 சதவிகிதம் ஆக இருக்க வேண்டும், உள்நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி 7 முதல் 8சதவிகிதமாக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், சீனாவைப் போன்று நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும், விரைவான தொழில் வளர்ச்சிக்கு மதிப்புக் கூட்டுவரியை வரும் ஏப்ரல் மாதம் அனைத்து மாநிலங்களிலும் அமுல்படுத்த வேண்டும், நிதி பற்றாக்குறை மற்றும் விலையேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்றும் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சிதம்பரம் முந்திய ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைவாக இருந்த போதிலும் சென்ற ஆண்டில் வளர்ச்சி விகிதம் நல்லபடியாக அமைந்தது என்றும், இது தொடர வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (து)

## மன்மோகன் சிங் அரசு நடவடிக்கைகளுக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா பாராட்டு

(புதுடில்லி)

மக்கள் தீர்ப்பைக் குலைக்கும் வகையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் அண்மைக் காலமாக நாடாளுமன்றத்தில் நடந்து கொள்வதாக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

புதுடில்லியில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பேசிய அவர், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இந்தப் பொறுப்பற்ற நடவடிக்கை எதிர்பார்த்ததுதான் என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து கடந்த 6 ஆண்டுகளாக ஆக்கபூர்வ எதிர்க் கட்சியாகச் செயற்பட்டு, கண்ணியத்துடன் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்ததாகக் கூறிய சோனியாகாந்தி தேசிய ஜனநாயகக் கூட்டணி இதற்கு மாறாகச் செயற்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டினார்.

மன்மோகன்சிங் அரசு பொறுப்பேற்ற நாற்பதே நாட்களில் கல்வி முறையில் ஏற்பட்ட குளறுபடிகளைச் சரி செய்தது. பாகிஸ்தானுடன் அணுவாயுதம் தொடர்பாகப் பரஸ்பர நம்பிக்கையூட்டும் நடவடிக்கையெடுத்தது, கிராம வளர்ச்சித் திட்டங்களை உள்ளூராட்சி அமைப்புக்கள் மூலம் முனைப்புடன் செயற்படுத்த முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டியது என்று சோனியா காந்தி பட்டியலிட்டார். (து)

# இந்தியச் செய்திகள்



திண்டுக்கல் மாவட்டம் குரும்பப்பட்டி முத்தாலம்மன் கோயில் திருவிழாவில் " வழுக்கு மரம் " ஏறும் நிகழ்ச்சி ஐந்து கிராம மக்கள் சார்பில் அண்மையில் நடந்தது. வழுக்கு மரத்தின் உச்சிக்குச் சென்று பரிசுப்பொருள்ள எடுக்கும் வீரரைப் படத்தில்காணலாம்.

## குற்றப் பின்னணி அமைச்சர்கள் மீதான எதிர்ப்புத் தொடரும்

குற்றப் பின்னணியுடைய அமைச்சர்களின் இரு அவை நடவடிக்கையையும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் உறுப்பினர்கள் புறக்கணிப்பார்கள் என்றும், ஆனால் ரயில்வே பட்ஜட் மீதான விவாதத்தில் பங்கு கொள்வார்கள் என்றும் பா.ஜ.க.வின் நாடாளுமன்றக் கட்சித் செய்தித் தொடர்பாளர் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே இந்த அமைச்சர்களிடம் தாங்கள் கேள்வி ஏதும் கேட்கப் போவதில்லை என்றும், அவர்களுடைய பதில்களைச் செவி மடுப்பார்கள் என்றும் கூறினார்.

சென்றமாதம் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்ததைப் போல கோரிக்கை மனுவொன்றை அடுத்த மூன்று நாட்களில் பிரதமரிடம் அளிக்கப்போவதாக அவர் கூறினார்.

அவை நடவடிக்கைகளில் பங்கேற்றபோதிலும் கறைபடிந்தவர்களை அமைச்சரவையில் சேர்த்துக கொண்டதற்குத் தங்களுடைய எதிர்ப்புத் தொடருமென்று பிரதமரிடம் தமது கூட்டணியின் மூத்த தலைவர்கள் தெரிவிக்கப் போவதாக சுஷ்மா ஸ்வராஜ் கூறினார். (து)

## ஈரானுக்கு இந்தியா படைகளை அனுப்பாது

(புதுடில்லி)

ஈரானுக்கு இந்தியப் படைகளை அனுப்பும் பேச்சுக்கே இட மில்லையென்று பிரதமர் மன்மோகன்சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது எதிர்கட்சியினருக்கும் வெளியுறவு அமைச்சருக்குமிடையே கடும் வாக்குவாதம் நடந்தபோது குறுக்கிட்டுப் பேசிய பிரதமர், ஈராக்கிற்கு இந்தியப் படைகளை அனுப்புவது இல்லையென்ற இந்தியாவின் கொள்கையில் மாற்றம் எதுவுமில்லையென்று குறிப்பிட்டார்.


முன்னதாக, வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் தவறான தகவல் அளித்ததாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ஜ.க. மற்றும் சிவசேனா உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள். (து)

# தாக்குதல் ஒளி நாடாக்களை வெளியிட்டு அதிர்ச்சி வைத்தியம்

## ஈராக் தீவிரவாதிகள் அதிரடி நடவடிக்கை

(பக்தாத்)

வழமைக்கும், எதிர்பார்ப்புக்கும் மாறாக இஸ்லாமிய தீவிரவாதக்குழு ஒன்று தனது அதிரடி நடவடிக்கைத் தாக்குதல்கள் சிலவற்றின் வீடியோ ஒளிப்பதிவு நாடாக்களை வெளியிட்டு மேற்குலகை






அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

முஜாஹிடீன் குழுக்களில் ஒன்று வெளியிட்டுள்ள இந்த ஒளி நாடாவில் ஒரு தாக்குதலுக்கான திட்டம் வகுக்கப்படுவது தொடக்கம் அது நிறைவேற்றி முடிக்கப்படும் வரையிலான செயற்பாடுகள் அனைத்தும் காண்பிக்கப்படுகின்றன.

கடந்த மே மாத இறுதியில் ஃபாலுஜா நகரில் நான்கு ''பிளக்வோட்டர்'' நிறுவன ஊழியர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி ஆரம்பத்தில் இருந்து மிகத் தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றது. மிகப் பிந்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் இத்தாக்குதல்களை ஒளிப்பதிவு செய்துள்ளமை அமெரிக்காவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும் அதேவேளை மிகத் துணிகரமாகவும் லாவகமாகவும் அவர்கள் தாக்குதல்களை ஒளிப்பதிவு செய்து வெளியிட்டிருப்பது மேற்குலகினருக்கு அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

(யே)

# ஸ்பெயினில் மாடு முட்டியதில் எண்மருக்குக் காயம்

(கொப்லஸ்ரோன்)

உலகப் பிரசித்திபெற்ற ஸ்பெயின் மாட்டுச் சண்டைகள் ஆரம்பமாகியுள்ளன. மாடுகளுடன் போட்டிபோட்டு ஓடிய எண்மர் அம்மாடுகள் முட்டியதில் காயங்களுக்குள்ளானதாக அறிவிக்கப்படுகிறது.



1591இல் ஏர்னஸ்ட் ஹேமிங்வே எழுதிய "த சன் ஓல்சோ றைசஸ்" எனும் நூலின் மூலம் உலகப் பிரசித்தம் பெற்ற ஸ்பெயினின் மாட்டுச்சண்டையில் மாடுகளை அடக்குதல், மாடுகளுடன் ஓடுதல் போன்ற போட்டிகள் நடைபெற்று வருகின்றன.


1924ஆம் ஆண்டு முதல் பதிவேடுகளில் சாதனைகள் பதியப்படத் தொடங்கியது முதல் இதுவரை 13 பொதுமக்கள் மாடுகளால் கொலையுண்டுள்ளனர். 825 மீற்றர் தூரம் மாடுகளுடன் போட்டிக்கு ஓடியவர்களை அம்மாடு முட்டிவிழுத்தியதில் எண்மர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். சுமார் 300 மிருகவதைக்கு எதிரான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளாடைகளுடன் இந்தப் போட்டிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

(யே)

# பிலிப்பைன்ஸ் நாட்டவருக்கு தடை ! கடத்தலின் எதிரொலி !

(மணிலா)

ஈராக்கில் பிலிப்பைன்ஸ்காரர் ஒருவர் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டுக்குத் தொழிலின் நிமித்தம் பிலப்பைன்ஸ் நாட்டவர் செல்வதை அந்நாட்டு ஜனாதிபதி அரயோ தடைசெய்துள்ளார்.



அல்-ஜசீரா தொலைக்காட்சி கடத்தப்பட்டவர் தொடர்பான ஒளிப்பதிவுப் படங்களை வெளியிட்டதைத் தொடர்ந்து அவரை இனங்காணும் முயற்சியில் பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 51 இராணுவ வீரர்களையும் பொலிஸாரையும் பிலிப்பைன்ஸ் நாடு ஈராக்கில் வைத்திருப்பதுடன், ஜனாதிபதி குளோரியா அரயோ அமெரிக்காவின் அதிதீவிர ஆதரவாளராகவும் விளங்குகின்றார். 72 மணித்தியாலங்களுள் பிலிப்பைன்ஸ் ஈராக்கிலிருந்து வாபஸ் பெறாவிடின் பணயக் கைதியின் தலை கொய்யப்படும் என்று தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.


(யே)

# பண்ணையில் மூவர் கொலை 14 வயது சிறுவன் கைது !

(நியூமெக்சிக்கோ)

அமெரிக்காவின் நியூமெக்ஸிக்கோ மாநிலத்தின் ஹொண்டோ பிரதேசத்திலுள்ள பண்ணை ஒன்றில் தனது தந்தையையும், சிற்றன்னையையும், அவளது மகளையும் கொலை செய்த சந்தேகத்தின் பெயரில் கோடிபோசி எனும் 14 வயதுச் சிறுவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

பண்ணையின் உரிமையாளரான டொனால்ட்சன் என்பவர் விடுமுறையில் சென்றிருந்தவேளையில், பண்ணை முகாமையாளராகப் பணியாற்றிய தனது தந்தையையும், இரண்டாம் தாரமாக அவர் மணம் முடித்திருந்த பெண்ணையும், அப்பெண்ணின் 14 வயது மகளையும் இச்சிறுவன் கொலை செய்து மிக ஆழமில்லாத குழி ஒன்றினுள் புதைத்திருந்ததாகவும் அறி விக்கப்படுகிறது.



விடுமுறை முடிந்து தனது முகாமையாளரைப் பார்க்கச் சென்று டொனால்ட்சன் சடலங்களை அவதானித்துப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, பொலிஸார் நடத்திய விசாரணையில் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கொலைக்கான காரணங்கள் இன்னமும் வெளியிடப்படாத போதிலும் நேற்று இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை சிறுவன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை


(யே)

## WORLD NEWS உலக தரிசனம்

# சதாமுக்குக் கடாபி நிதியுதவி! வழக்கை ஐ.நா. விசாரிக்குமா?

(பாரிஸ்)

சதாம் மீதான வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படியும், அதற்கான நீதிபதிகளை நியமிக்கும்படியும் ஐ.நா.விடம் வலியுறுத்த சதாமின் வக்கீல்கள் திட்டமிட்டுள்ளனர். ஈராக் முன்னாள் அதிபர் சதாம் மீதான வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஆதரவாக வாதாட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரபல வக்கீல்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இமானுவேல் லுதாத் என்பவரும் அதில் ஒருவர். பாரிஸில் நேற்று முன்தினம் அளித்தபேட்டி ஒன்றில், சதாம் வழக்குப் பற்றி அவர் கூறியதாவது;




சதாம் மீது போர்க் குற்றங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன. அவர் மீதான குற்றங்களை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றம், அமெரிக்க ஆதரவாளரான சலீம் சலாபி தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. வழக்குகளை விசாரிக்கப் போகும் நீதிபதிகள் யார் என்பதே இன்னும் அறிவிக்கப்படவில்லை. மேலும், நியமிக்கப்படும் நீதி பதிகளும், அமெரிக்காவின் கைப்பாவையாகவே இருப்பர். கடந்த வியாழக்கிழமை சிறப்பு நீதி மன்றத்தில் சதாம் ஆஜர்படுத்தப்பட்டபோது, ஐ.நா. அனுமதியில்லாமல் போர் மூலம் எனது அரசு நீக்கப்பட்டது. நான் இன்னும் ஈராக் அதிபராகவே இருக்கிறேன் என்று அவர் கூறியுள்ளார். இதன் மூலம், இந்த நீதி மன்றத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. சதாமை சந்தித்துப் பேச அமெரிக்கா, ஈராக் அதிகாரிகள் இன்னும் எங்களை அனுமதிக்கவில்லை. சிறப்பு நீதிமன்றம் நேர்மையாக செயல்பட வாய்ப்பில்லை அதன் பின்னணியில் அமெரிக்கா உள்ளது.

எனவே, சதாம் மீதான வழக்குகளின் விசாரணையை ஐ.நா. ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதிமன்றத்தின் நீதிபதிகளை ஐ.நா.வே நியமிக்க வேண்டும் என்று ஐ.நா.விடம் வலியுறுத்த முடிவு செய்துள்ளோம். சதாமுக்கு ஆதரவாக வாதாட நியமிக்கப்பட்டுள்ள வக்கீல்கள் குழுவில் 21 பேர் உள்ளனர். பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் அரபு நாடுகளைச் சேர்ந்த வக்கீல்கள் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை சதாமின் வழக்குச் செலவிற்காக லிபியா அதிபர் முகமது கடாபி பெரும் தொகையை வழங்கியுள்ளார். சதாமின் வக்கீல் இமானுவேல் லுதாத், தனது பேட்டியில் இது குறித்து கூறியதாவது, வழக்கு விசாரணையை சதாம் சந்திப்பதற்குத் தேவையான நிதியை பல்வேறு நாடுகள் அளிக்கின்றன. குறிப்பாக் லிபியா அதிபர் கடாபி அதிகாரபூர்வமாகவே சதாமின் வழக்கிற்கு பெருந்தொகையைத்தந்துள்ளார். அவருடைய மகள் ஆயிஷா கடாபியும் வக்கீல்கள் குழுவில் சேர்ந்துள்ளார். சதாமுக்கு ஆதரவாக ஆஜராகவுள்ள வக்கீல்களுக்கு ஈராக்கின் பாதுகாப்பு மற்றும் நீதித் துறை அமைச்சர்கள் கொலைமிரட்டல் விடுத்துள்ளனர். வழக்கில் ஆஜராக ஈராக் வரும்போது எங்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று அவர்கள் மிரட்டியுள்ளதாக, எங்கள் வக்கீல்கள் குழுவைச் சேர்ந்த முகமது ரஸ்தான் என்பவர் கூறியுள்ளார் என்று அவர் கூறினார்.

(யே)

# மூன்று அமெரிக்கர் காபூலில் கைதாகினர்

(காபூல)

சட்டவிரோதமான முறையில் ஏழு ஆப்கானிஸ்தான் பிரஜைகளைத் தடுத்து வைத்திருத்ததாகக் கருதப்படும் மூன்று அமெரிக்கப் பிரஜைகளும் நாங்கு ஆப்கான் பிரஜைகளும் கைது செய்யப்பட்டிருப்பதாக அந்நாடு அறிவித்துள்ளது.



காபூலிலுள்ள அமெரிக்கத் தூதரகம் இது பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்கப் பிரஜைகளின் கைது பற்றித்தாம் அறிந்திருப்பதாகவும் அவர்கள் சிலரைத் தடுத்து வைத்திருந்தமை அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்குத் தெரியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இத் தடுத்து வைப்பு மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக மூன்று ஆப்கானியர் இறந்துள்ளதாக மனித உரிமைக் குழுக்கள் குற்றஞ் சாட்டியுள்ளதுடன் அமெரிக்கப் படைகளால் இவ்வாறான துன்புறுத்தல்கள் தொடர்வதாகவும் இக்குழுக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. (யே)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

# இருட்டைக் குறை கூறாதீர்கள் வெளிச்சத்தை ஏற்றுங்கள்

சமாதான சூழ்நிலைக்குக் கிரகநிலை பாதகமாக அமைந்துவிட்டது போல் தெரிகிறது. யுத்த நிறுத்த உடன்படிக்கை மெல்லமெல்ல விலகிச் செல்வது போன்ற உணர்வு நிலையில் மக்கள் குழம்பிப் போயுள்ளனர்.

நாட்டில் மீண்டுமோர் சண்டைக்கான கள நிலை கருக்கட்டுவது போல் தெரிகின்றது. கிழக்கு மாகாணத்தில் தொடர்கின்ற படுகொலைச் சம்பவங்கள் யுத்த நிறுத்த மீறலின் தொடக்கமாக அமைந்த வேளை அது குறித்து அரசோ அன்றிப் படையினரோ எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் நேற்று முன்தினம் கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் கொழும்பில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் 'மீண்டுமோர் சண்டை'என்பதனை உறுதிப் படுத்தும் சமிக்ஞையாக அமைந்துள்ளது.

கொழும்பில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் யாரால் நடத்தப்பட்டதென்ற எதிர்வு கூறல்கள்-விமர்சனங்கள் என்பனவற்றுக்கப்பால் அக் குண்டுத் தாக்குதல் மூலம் தென்னிலங்கைப் பேரினவாத அரசியல் சக்திகளுக்கு ஓர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை இங்கு உணரப்பட வேண்டிய விடயமாகும்.

அதாவது, வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் இலங்கைப் படையினர் நிலைகொண்டிருப்பதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல், காலம் கடத்துவதும் இந்த நாட்டில் குண்டு வெடிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் என்பதைத்' தென்னலங்கை அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இருட்டைக் குறைகூறுவதைவிடுத்து வெளிச்சத்தை ஏற்றுங்கள் என்பது வெள்ளையர்களின் தத்துவம். அவர்களின் தத்துவம் இலங்கைக்கு மிகவும் பொருத்தமாகவுள்ளது. குண்டு வெடிப்பு எனக் கூறிக்கொண்டிருப்பதைத் தவிர்த்து குண்டு வெடிப்பிற்கான காரணமென்ன? அவற்றைத் தொடர விடுவதன் விளைவு போன்றவற்றை ஆராய்ந்து அதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதே முறையானதாகும்.

இதைவிடுத்துக் குண்டுவெடிப்பென சதா குறை கூறிக் கொள்வதால், சத்தங்கள் ஓய்போவதில்லை. எனவே, இலங்கைத் தீவில் சிறுபான்மை மக்களின் நலன்களைப் பேணுவது அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை எனக் கூறிக் கொண்டு காலம் கடத்துவதன் விளைவு நாட்டில் மீண்டுமோர் யுத்தத்தை வரவழைப்பதாக இருக்குமேயொழிய அது சமாதானத்தை-நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதாக அமைய மாட்டாது.

காலாகாலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்ற சிங்கள அரசுகளின் இனவாதப் போக்கினால் இந்த நாட்டில் வாழ வேண்டிய அப்பாவி மனித உயிர்கள் அநியாயமாக அழிக்கப்பட்டன. மக்கள் தேடிய தேட்டங்கள் மண்ணோடு மண்ணாகிப் போயின. சொந்த இடங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்விடங்களைவிட்டு வெளியேறி அகதி முகாம்களிலும், நலனோம்பு நிலையங்களிலும் வறுமையில் காலம் கழிக்கின்றனர்.

தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதாகப் பொய்ப் பிரசாரம் செய்து சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் இலங்கை அரசுகள் ஏமாற்றிவருகின்றன.

இந்த ஏமாற்று வித்தைகள் தொடருமாயின் அதன் விளைவு அருமந்த மனித உயிர்களின் இழப்பாகவே இருக்கும்.

ஆகவே'சண்டை' குண்டு வெடிப்பெனக் கூறிக் கொள்வதைவிடுத்து தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்துவைக்க அரசு காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனைச் செய்வதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்தி வடக்குக் கிழக்கு தமிழர்தாயகத்தின் இடைக்காலத் தன்னாட்சியை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

# மின் இணைப்பு வழங்குவதில் பாரபட்சமென மக்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் புதிய மின் இணைப்பைப் பெறுவதற்கென பணத்தைச் செலுத்தியிருக்கும் பலருக்கும் 3,4 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் புதிய மின் இணைபுகள் வழங்கப்பட்டாமலுள்ளன.

இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மின் இணைப்பைப் பெறுவதில் பெரும் சிரமங்களும் தாமதங்களும் எதிர்கொள்ளப்படுகின்றன.

புதிய மின் இணைப்பைப் பெறவிரும்புபவர்களிடம் மின்சார சபை கல்தூண்களுக்கும் மின் இணைப்பு வயர்களுக்கும் என கட்டணத்தை வசூலித்து வருகின்றது.

புதிய மின் இணைப்புக்கான கட்டணங்களை உடன் செலுததினால் உடன் மின் இணைப்பு வழங்கப்படும் என மின்சார சபை வட்டாரங்களால் கூறப்படுவதை நம்பி பொதுமக்கள் குறித்த கட்டணங்களை உடனடியாக வங்கிகளில் செலுத்தியுள்ளனர்.

பணம் செலுத்திய பின்னர் இணைப்பை வழங்கும் படி பொது மக்கள கேட்கின்றபோது "தூண் இல்லை" வரவேண்டும் எனக் கூறி சாக்குப்போக்குகள் கூறப்பட்டு வருவது குறித்து பொதுமக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

புதிய மின் இணைப்பைப் பெறுவதற்கென பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பணத்தைச் செலுத்தியுள்ளவர்கள் அன்றாடம் மன்சார சபையின் அலுவகத்திற்கு தாம் கட்டணம் செலுத்திய ஆவணங்கள் சகிதம் சென்று வருவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இருப்பினும், சாதாரண பொதுமக்களுக்கு மின் இணைப்பை வழங்குவதில் சபை பாரபட்சம் காட்டி வருவதாகவே பொது மக்கள மத்தியில் பேசப்பட்டு வருகின்றது.

இதேவேளை, குடா நாட்டில் பழைய மின் இணைப்பைப் பெற்றிருந்த வீடுகளுக்கான மின் இணைப்பை வழங்குவதிலும் நீடித்த தாமதம் நிலவி வருகின்றது. இது குறித்து பழைய பாவனையாளர்கள் மின்சார சபை அலுவலகங்களுக்கு அடிக்கடி சென்று வருகின்ற போதிலும் பலன் இல்லை என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வட பகுதியில் மின்சாரப் புனரமைப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கடுகள செய்யப்பட்டிருந்த போதிலும் ஏன் இத்தகைய் பின்னடைவுகள் இடம்பெற்று வருகின்றன என்பது பற்றிப் பொது மக்கள் புரியாத நிலையிலேயே இருக்கின்றனர்

(உ-16)

# கிழக்கு தாக்குதல்களைத் தடுக்க தலைமைப்பீடம் நடவடிக்கை எடுக்கும்

## மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளா

(மட்டக்களப்பு)

கிழக்கில் புலிகள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல் களைத் தடுக்க தலைமைப்பீடம் விரைவில் நடவடிக்கைகளை எடுக் கும் என மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.



தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் ... தினமான கடந்த திங்கட்கிழமை ந... சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கரு... அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீண்டி ஆத்திரமூட்டுவதன் மூலம் புலிகள் மீண்டும் ஓர் யுத்தத்திற்கு அழைக்கும் முயற்சியாகவே இது அமைகின்றது.

எனினும், புலிகள் தமிழ் மக்களின் நிரந்தர அமைதிக்காக வேண்டி தொடர்ந்தும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பார்கள்.

இத்கைளய தீய சக்திகளின் செயற்பாடுகள் புலிகளை ஒருபோதும் பலவீனமடையச் செய்யாது. புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

எனினும், புலிகள் மீது நடத்தப்படும் இத்தகைய தாக்குதல்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் தலைமைப் பீடம் விரைவில் உரிய நடவடிக்கைகள்ளை மேற்கொள்ளும்.

தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குழப்பியடிக்க முயலும் தீயசக்திகளின் செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (உ-4)

# அமைச்சர் இரட்ணசிறி

# மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிரானவர்களுக்கு சாட்டையடி

(கொழும்பு)

மதமாற்றத் தடைச்சட்டத்திற்கு எதிரானவர்கள் வேண்டுமானால் உயர்நதிமன்றம் வரைக்கும் செல்லலாம் என பிரதிப் படைத்துறை அமைச்சரும், புத்தசாசன அமைச்சருமான இரடணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது தனிப்பட்ட நலன்களுக்காக மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிரான கருத்துக்களையும், தேவையற்ற சூழல்களையும் உருவாக்குவதற்கு ஒரு சிலா முயல்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமொிக்க மற்றும் தென் கொாிய கிறிஸதவ அமைப்புக்களின் நிதியுதவியுடன் புதிதாக தேவாலயங்களைக் நிர்மாணித்துள்ள வாகளே இது குறித்து அதிக அக்கறை காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என்ற பெயரில் இவர்கள் தீவிர மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளாா.

சட்டவிரோத மதமாற்ற நடவடிக்கைகள் மதமாறறச் தடைச்சட்டத்தினால் பாதிக்கப்படுமானால் வெளிநாட்டு நிதியுதவிகள் பாதிக்கப்பட்டு விடுமோ என குறிப்பிட்ட அமைப்புக்கள் அஞ்சுவதாகவும் தொிவித்த அவர், தமது அரசின் இந்த மதமாற்றத் தடைச் சட்டத்தினால் முன்னரே நிர்மாணிக்கப்பட்ட தேவாலயங்களுக்கு எதுவித பாதிபுக்களும் ஏற்படாதெனவும் குறிப்பிட்டுள்ளாா. (உ)

# கனடாவின் தொண்டர் விருது தமிழ் மாணவி மயூரிக்கு

(ரொறன்ரோ)

கனடா ரொறன்ரோவில் **Rogers** வெளியீட்டகத்தினால் வெளியிடப்படும் **FLARE** சஞ்சிகையின் 8வது வருடாந்த விருது வழங்கும் வைபவத்தில் தமிழ் மாணவி செல்வி மயூரி மனோகரன் தொண்டர் விருதினைப் பெற்றுள்ளார்.

கனடாவில் நாடளாவிய ரீதியில் வருடாந்த விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட ஆறு பேரில் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் முதலாமாண்டு மாணவியான மயூரி மனோகரனும் ஒருவராவார். சமூக அக்கறையுள்ள மயூரி கனடாவுக்கு புலம் பெயரும் புதிய தமிழ் மாணவகளுக்கு உதவி செய்வதில் பலருக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளார்.

தனது ஆறாம் வகுப்பிலிருந்து தன்னாலான உதவிகளை, பல தடவைகளில் தனது வயதையும் மீறி செய்துவந்துள்ள மயூரி 2003ம ஆண்டு மொத்தம் 620 மணித்தியாலங்கள் சமூக சேவை செய்துளளார். தான் வசித்துவரும் பகுதியில் **Tamil FEM** என்ற தமிழ் மாணவிகளுக்கான சமூக அமைப்பொன்றை உருவாக்கி அதன் இணைபாளராகவும் மயூரி கடமையாற்றி வருகின்றார்.

இந்த அமைப்பின் மூலம் கனடாவுக்கு புதிதாக புலம் பெயரும் பெண்கள் குறிப்பாக மாணவிகள் எதிர்நோக்கும் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு உதவி செய்வதே தனது நோக்கம் என மயூரி தெரிவித்துள்ளார். தற்போது ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் முழுநேர மாணவியான மயூரி, எதிர்காலத்தல் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற விருப்பத்தையும் வெளிபபடுத்தியுள்ளார். (உ)

# கன்னித் தமிழுக்கு கலாமன்றம் ஆற்றும் பணி அளவிடற்கரியது

## இசைநாடக விழாவில் சூ. சிறில் உரை

(கொழும்புத்துறை)

தேசியப் பற்றுணர்வு மக்களை ஆழப்பற்றிப் பிடிக்கும் போது தான் தனக்கென்ற அளவிலும் உறுதியுடன் விடுதலை பெற்றிட முடியும்.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ. சிறில் கடந்த 3ஆம் திகதி திருமறைக் கலாமன்றத்தில் அண்ணாவியார் அ.பாலதாஸ் தலைமையில் நடைபெற்ற இசை நாடக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த நான்கு தசாபதமாகத் திருமறைக் கலாமன்றம் இயல இசை நாடகத் தமிழுக்கு அரும்பணியாற்றி வருகின்றது. உயிர் உன்னதமானது ஆனால் உயிரினும் மேலானது தமிழ். அது தான் தாய்மொழி.

உலகில் உள்ள 200றகும் மேற்பட்ட மொழிகளை சுமார் 600 கோடி மக்கள் பேசுகின்றனர். இதில் 5 வீதமான மொழிகள் அழிந்து போகும் நிலையிலுள்ளன.

ஒரு சில மொழிகளே பிற மொழிகளின் ஊடுருவல் இல்லாது தனித்துவமாக வாழ்கின்றன. அதில் ஒன்று தான் எமது தமிழ்மொழி. பெருமையும் முதுமையும் நிரப்பப் பெற்றது தமிழ், இன்று தமிழர்கள் நாம் உலக அரங்கில் தனித்தன்மையுடன் நிற்கின்றோம் என்றால் அதற்கு எமது பலம் தான் காரணம்.

நவீன ஊடகங்களும்,தொழில்நுட்பங்களும் வளர்ந்துள்ள நிலைக்கு தமிழையும் உயர்த்த வேண்டும் .விஞ்ஞான வளர்ச்சியால் மனித நாகரிகம்,மனித நேயம், மனிதப் பற்று என்பன அழிந்து வருகன்றன. மனித நேயத்தைக் கட்டிக்காக்கும் மன்றங்கள் அருகி வருகின்றன.

ஆனால் திருமறைக் கலாமன்றம் இந்தப் பணிகளில் அன்று தொட்டு இன்று வரை ஈடுபட்டு வருகின்றமையை அனைவரும் அறிவோம்.

திருமறைக் கலாமன்றம் கலைக்கும் கன்னித்தமிழுக்கும் பணி ஆற்றுகின்றது. அவர்களின் பணி காலத்தால் மறக்க முடியாததும் அளவிடற்கரியதும் என்று கூறினார். (உ-51)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உலகங்கள் வரும், போகும் அதனால் என்ன? ஆன்மா வாழ்கிறது. விரிவடைந்து கொண்டே இருக்கிறது. உலகங்கள் ஆன்மாவிற்குள் நுழைந்தாக வேண்டும். கடலில் நீர்த்துளிகள் மறைவது போன்று அவை அங்கே மறைந்தாகவும் வேண்டும். அந்த உலகம் ஆன்மாவின் லட்சியமாக இருப்பது.

சுவாமி விவேகானந்தர்

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 ஏப்ரல் மாதத்திற்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான சிவப்பு நாட்டரிசியை (புழுங்கல்) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ் குறிப்பிடப்பட்ட பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு என கீழே தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படும் இடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு |
|---|---|---|
| | | ஏப்ரல் (MT) |
| 1 | சாவகச்சேரி | 190 |
| 2 | கைதடி | 70 |
| 3 | கொடிகாமம் | 135 |
| 4 | உடுப்பிட்டி | 32 |
| 5 | கட்டைவேலி- நெல்லியடி | 45 |
| 6 | பருத்தித்துறை | -114 |
| 7 | புலோலி | 27 |
| 8 | மருதங்கேணி | 80 |
| 9 | யாழ்ப்பாணம் | 311 |
| 10. | நல்லூர் | 161 |
| 11 | அச்சுவேலி | 154 |
| 12 | நீர்வேலி | 115 |
| 13 | மானிப்பாய் | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 64 |
| 16 | தெல்லிப்பழை | 150 |
| 17 | சங்கானை | 183 |
| 18 | சுன்னாகம் | 196 |
| 19 | புங்குடுதீவு-நயினாதீவு | 40 |
| 20 | வேலணை | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 |
| 22 | காரைநகர் | 55 |
| 23 | தீவகம் | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 |
| | மொத்தம் | 2500 |

02. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா. 500/- யை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004 .07.09 திகதி தொடக்கம் 2004 .07.22 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா. 500/- யை அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடம் இருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்டக் கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்) என முகவரி இடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2004.07.23 பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விக்காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

06. கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டு புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

07. கேள்விக்காரர்கள் (Bidders) குறிப்பிட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்குமேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்குமான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதை உடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாக கருதப்படும்.

08. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின்பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

09. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோகவிலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

10. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியில் இருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

செ. பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம். 08-07-2004

# கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டு 28 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்

## 32 பேர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

நாடளாவிய ரீதியில் இவ்வாண்டு கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இவ்வாண்டு ஆரம்பத்தில் இருந்து இற்றை வரை கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் 28 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாகவும் இவற்றில் 32 பேர் பலியாகியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு 9 மில்லி மீற்றர் பிஸ்ரல் ரகக் கைத்துப்பாக்கிகளே பெருமளவில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.இவ்வாறான சம்பவங்களைத் தொடர்ந்து கிழக்கில் பாதுகாப்புப் பலபடுத்தப்பட்டிருப்பதுடன் ரோந்துகளும் அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-4,61)

# குண்டு வெடிப்புச் சம்பவம் சமாதானத்தைப் பாதிக்காது

## அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் இடம் பெற்ற மனிதக் குண்டுவெடிப்புச் சம்பவமானது, அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.. அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதில் அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த பாதுகாப்பற்ற நிலைமையினாலேயே தற்கொலைக் குணடுதாரிகள் கொழும்புக்கு இலகுவாக வரக்கூடியதாக இருந்தது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(இ-121)

### உலக உணவுத் திட்ட பிரதிநிதிகள் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள உலக உணவுத் திட்ட பிரதிநிதி மஸ்லன் யூசொப் மற்றும் நிகழ்ச்சி உதவியாளர் கே.பி.சுகதபால ஆகியோர் நேற்றைய தினம் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமியைச் சந்தித்து யாழ்.குடாநாட்டில் தாம் அமுல் படுத்தியுள்ளதும், அமுல்படுத்தவுள்ளதுமான திட்டங்கள் குறித்து கலந்துரையாடினர். (உ-19)

# வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(வவுனியா)

வடக்குக் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வவுனியாவில் நடத்தப்பட்டுவரும் வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 9ஆவது விளையாட்டுப் போட்டிகளின் முடிபுகள் வருமாறு,

**உடற்பயிற்சிப் போட்டி**

**ஆண்கள் பிரிவு**

1ஆம் இடம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், 2ஆம் இடம் பருத்தித்துறை ஹாட்லிக கல்லூரி, 3ஆம் இடம் முழங்காவில மகாவித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

1ஆம் இடம் வவுனியா இறம்பைக குளம் மகாவித்தியாலயம். 2ஆம் இடம் கிளி.இராமநாதபுரம் மேற்கு வித்தியாலயம். 3ஆம் இடம் யாழ். உடுவில் பெண்கள் கல்லூரி.

**அணிநடைப் போட்டி**

**ஆண்கள் பிரிவு**

1ஆம் இடம் கிளி.முழங்காவில் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம் 3ஆம் இடம்பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

1ஆம் இடம்:வவு.இறம்பைக் குளம் மகா வித்தியாலயம், 2ஆம் இடம்:கிளி.இராமநாதபுரம் மகா வித்தியாலயம், 3ஆம் இடம்கிளி. இராமநாதபுரம் மேற்கு வித்தியாலயம்.

**கபடிப் போட்டி**

**பெண்கள் பிரிவு**

1ஆம் இடம்வவு.சைவப்பிரகாச வித்தியாலயம், 2ஆம் இடம்: வவு.பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயம், 3ஆம் இடம்கந்தளாய் அக்கிரபோதி மகாவித்தியாலயம். (த-13)

## போராளி வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது வீரச்சாவடைந்த போராளியின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் நேற்று வெளியிடடுள்ளனர்.

5ஆம் வட்டாரம் துறைநீலாவனை அம்பனையைச் சேர்ந்த மேஜர் அன்புநேசன் அல்லது முறிசன் (கோணேஸ் ரவிச்சந்திரன்) என்ற போராளியே வீரச்சாவடைந்தவர் ஆவார். (ச)

## மருத்துவபீட மாணவிக்கு..

1999ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வில்லையென்றும் தாங்கள் அக்காலப் பகுதியில் இந்தியா சென்றிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது தவறான கூற்றாகும். தாங்கள் இப்பரீட்சைக்கு 06.11.1999 விண்ணப்பித்துள்ளீர்கள் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவ்விடயம் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

✿மருத்துவ பீட அதிகாரிகளினால் எச்சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு மாணவர் என்ற ரீதியிலான எச்சலுகையும் மறுக்கப்படவில்லை.

✿பல்கலைக் கழகங்களில் பரீட்சைப் பெறுபேறுகள் மீள் பரிசீலனை செய்யப்படுவதில்லை எனினும் தங்களுக்கு என்னால் 06.07.2004 திகதியிடப்பட்டு தரப்பட்ட கடிதத்தில் பதில் தரப்பட்டுள்ளது.

✿தங்களது நட்டஈடு தொடர்பான கோரிக்கைக்கு ஏற்கனவே மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினால் மாணவர்கள் முன்னிலையில் திருப்திகரமான பதில் தரப்பட்டுத் தங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

✿துணை வேந்தரால் வேறு பல்கலைக கழகத்தில் கல்வியைத் தொடர்வதற்கு சிபார்சுக் கடிதம் தரப்படுமென உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது. (த-19)

## மருத்துவபீட...

வுரையாளர்கள் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர், மருத்துவ பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர்ரை உள்ளடக்கிய குழுவொன்றை அமைப்பதற்கு முடிபு செய்யப்பட்டது.இதன்படி இன்று இக் குழு அமைக்கப்படும்.

நேற்றைய கூட்டத்தில், மருத்துவபதில் பீடாதிபதி அரசரட்ணம், விரிவுரையாளர்களான குணராஜசிங்கம், சிவநாதன் மற்றும் உதவிப் பதிவாளர் ஜெயக்குமார், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார், மருத்துவ பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆர்.விமலன், சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் புஸ்பரட்ணம், பிரதிப் பிரதம மாணவ ஒழுக்காற்றுத் துறை ஆசிரியர் ஐ.ஜி.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மாணவர் ஒன்றியக் கூட்டமும் நடைபெற்றது. இக் கூட்டம் தொடர்பாக மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மனிதாபிமான அடிப்படையிலேயே மருத்துவ பீட மாணவியின் உண்ணாவிரதப் போராட்டத்தில் மாணவர் ஒன்றியம்தலையிட்டு போராட்டத்தை இடை நிறுததியிருந்தது. சகமாணவியின் உயிரை காப்பாற்றுவதற்காகவே இதில் தலையிட மாணவர் ஒன்றியம் முடிபு செய்தது.

மாணவியின் கோரிக்கைக்கு சுமுகமான தீர்வு கிட்டும்வரை அதற்காகக் குரல் கொடுப்போம். அதற்கான அழுத்தத்தையும் நிர்வாகத்திற்கு கொடுத்த வண்ணம் இருப்போம். இதன் ஆரம்பகட்டமாக விரிவுரைகளை பகிஷ்கரிக்க முடிபெடுத்துள்ளோம் என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-19)

## சந்தேகத்தில்...

ஒரு கிலோகிராம் எடையுள்ள வெடிமருந்து கொண்ட வெடிபொருள் அங்கியைப் பயன்படுத்தியிருப்பதாக இரசாயனப் பகுப்பாய்வாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தலைநகரில் இராணுவப் பொலிஸ் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பும் அதிகரித்துள்ளது. (உ-4,61)

## தேசவிரோதிகள்..

தங்கள். இராணுவத்தின் உதவியுடன் இவர்கள் குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.பணத்திற்கு உள்வாங்கப்பட்ட இவர்கள் பல தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இலுப்பையடிச் சேனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாகக் காரியாலயம் மற்றும் மகளிர் போராளிகள் தங்குமிடம் என்பனவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்பிருந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமது பிரதேசத்தில் இவர்களைப் போன்று பலர் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு கண்காணித்து வருவதாகப் புலிகள அறிவித்துள்ளனர்.

பணத்திற்காகவும், அற்ப ஆசைகளுக்காவும் தேச விரோத சக்திகளுடன் இணைந்து தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் மக்களை ஈடுபடாமல் இருக்குமாறும் விடுதலைப் புலிகளின் மட்டு.அம்பாறை மாவட்ட ஊடகத் துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க தாயக மீட்பில் அக்கறை கொண்டு சுய விருப்பின் பேரில் தம்முடன் இணைந்து செயற்படலாமென்றும், விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள் அவர்களது அச்சகத்தில் 09.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.